"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" தாபிதம்: 1876

பாப்பரசர் தினம்

கார்த்திகை 4.

# சத்தியவேத பாதுகாவலன்

தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம் தொலைபேசி: 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

87-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1962-ம் ஆண்டு கார்த்திகை மீ 3-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 10 | 44-ம் இலக்கம்

# திருக்குடும்பக் கன்னியரின் ஒப்பற்ற தொண்டு

## இலங்கையில் நூற்றுண்டுத் தியாக நிறைவு

### அன்புத்தந்தை அருளப்ப அண்ணல் வாழ்க!



நந்தாத வொளிபடைத்த நமது யேசு நாதரது ஞானவுட லதிலேதூய
எந்தாதை பாப்பரசர் தலையாய் நின்று ஏற்றமிகு மலைமணியாய் இலங்காநிற்குஞ்
சிந்தாத திருமறையின் மக்களந்தத் திருநாதர் அவயவங்க ளென்னக்கொண்டு
அந்தாதி யுலகமெலா மன்பாலாளும் அருளப்ப பாப்பரசர் ஆயுள்நீள்க!

இலங்கையில் முதன்முதலாகக் கால் வைத்த கன்னியாஸ்திரிமார் திருக்குடும்பக் கன்னியரே. 1862-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 2-ம் தேதி கப்பல் மார்க்கமாக யாழ்ப்பாணத்திலே வந்திறங்கிய இக் கன்னியர்களது தியாகசேவையின் நூற்றுண்டு இவ்வாரம் பூர்த்தியாகிறது. இத்தருணத்தில் இவர்களை எங்கள்நாட்டுக்குத் தமது விசேஷ கிருபையினுல் அனுப்பிவைத்த சர்வேசுரனுக்குத் துதிசெலுத்துவதுமன்றிக் கடந்த நூறு வருடங்களாக இவர்கள் எமக்கு ஆற்றிய அளப்பரும் தொண்டுகளுக்காகவும், அரும்பெரும் தியாகங்களுக்காகவும் எங்கள் அணைகடந்த நன்றியையும், கடமைப்பாட்டையும் இவ்வுத்தம கன்னியர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

நூறு ஆண்டுகளுக்கு முன்னே வந்த திருக்குடும்பக் கன்னியரின் தொகை 6. தற்போதைய தொகை 650. இவர்கள் இன்று இலங்கையின் பல பகுதிகளிலும் உள்ள நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளிலே ஏறக்குறைய 50,000 மாணவிகளுக்குக் கல்வி கற்பிப்பதுமன்றி, அநாதசாலைகளிலும், வைத்தியசாலைகளிலும் அருந்தொண்டு ஆற்றிவருகின்றனர். இவர்களது செபங்களினுலும், பிரயாசங்களினுலும, தற்பரித்தியாகங்களினுலும் நாம் அடைந்த அளவற்ற நன்மைகளோ சொல்லுந்தரமன்று. தன்னலமற்ற இவர்கள் சேவையை இத்தருணம் நினைவுகூர்ந்து, எல்லாம்வல்ல தேவனின் இன்னருளை இவர்கள்மேல் இரந்துகொள்ளுவோம்.

வாழ்க திருக்குடும்பக் கன்னியர்!

வளர்க அவர்கள் திருத்தொண்டு!

## பாப்பரசரைத் தரிசித்த ஷின்ரோ குரு

பாப்பரசர் ஒருவரால் முதல்முறை வரவேற்கப்பெற்றவரும், யப்பானிய ஷின்ரோ மதக் குருவுமான மத்சுபாரா சிசுக்கா, "அருளப்ப பாப்பு என்னை மிகு அன்புடனும், கண்ணியத்துடனும் வரவேற்றுர்" என ரோக்கியோவிற் கூறினுர்.

அவருடைய அரியாசனத்தை விட்டெழுந்து என்னைத் தமது பிரத்தியேக அலுவலகத்திற்கு அழைத்துச்சென்றுர். நாம் பேசிக்கொண்டிருக்கும்போது பாப்பு என் கரங்களை அன்புடன் பற்றிக்கொண்டார். நாம் கத்தோலிக்க மதத்தினருக்கும், ஷின்ரோ மதத்தினருக்கு மிடையிலுள்ள தொடர்பு பற்றிப் பேசினேம். "மதம் யாது?" எனப் பாப்புவிடம் கேட்டேன். "ஒளியும், அன்பும்" என்றுர். "மதத்தினை வழியாய்ப் பரஸ்பர நம்பிக்கையுடனும், மதிப்புடனும் வாழ்வோம்" என்றுர்.

சந்தப்பாப்பானவர் தம்மை எம்தேவனே காத்தாளுவீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல்! கல்யாணம்!! தேன்நிலவு!!! இவைதானு மெய்விவாகம்?

— பிரான்சீஸ் எம். ஜோசவ் —

குருத்துவம்போன்று மெய்விவாகமும் பரமதேவனிடமிருந்து வரும் ஓர் அழைத்தல் என்பதை யாரும் மறுக்க முடியாது. மெய்விவாகத்துக்கும் தேவ அழைத்தலுக்குமுள்ள நெருங்கிய சம்பந்தம் எத்தனையோ இளம் பெண்களுக்கும், ஆண்களுக்கும் இன்னும் புரியாத புதிராகவே இருக்கின்றது. திருமணம் என்னவென்று தெரிந்தவர்கள்போலவே இவர்கள் எல்லோரும் நடந்துகொள்ளுகிறார்கள். காதல், அதன்பின் கல்யாணம், பின்னர் தேன்நிலவு என்றால் மெய்விவாகம் முடிந்துவிட்டது என்பதே அவர்களின் கருத்து. "நான் விரும்பிவிட்டால்—இல்லை துணிந்துவிட்டால், என் விவாகத்துக்கு யார்தான் தடைபோட முடியும்?" இது அவர்கள் கேட்கும் கேள்வி.

சருவேசுரனுக்கும் மெய்விவாகத்தில் பங்குண்டு என்பதை மணமாகாத இளம் ஆண்கள், பெண்கள் மட்டுமல்ல, மணமான எத்தனையோ தம்பதிகள் கூடச் சரிவர உணர்வதில்லை. தேவனேதான் அதைத் தோற்றுவித்தவர்; அவரேதான் அதை முதன்முதலாக உலகுக்கு அளித்தவர் என்பதை அநேக கிறிஸ்தவர்கள் மறந்துவிடுகிறார்கள். ஆதிமனிதனையும், மனுஷியையும் படைத்து, மனிதவர்க்கத்தைப் பெருக்கும் வேலையில் தனக்குத் துணையாக இருக்கும்படி பணித்தவரும் அவரே. அவர்கள் இருவரையும் புறம்பு புறம்பாகப் படைக்கவில்லை. ஆதாமின் விலாவெலும்பிலிருந்து ஏவாளைப் படைத்து, அத்தால் அவர்களிருவரும் ஒருவரே என்றும் அமைத்து விட்டார். இயற்கையான ஓர் ஒப்பந்தத்தில் அவர்களை இணைத்ததுமல்லாமல், அவ்வொப்பந்தத்தை ஒரு தேவதிரவிய அனுமான அந்தஸ்துக்கும் உயர்த்தி வைத்தார்.

"ஒரு கிறிஸ்தவ ஆணும் பெண்ணும் என்று தேவனின் சந்நிதானத்தில் முழந்தாளிட்டுத் தாம் ஒருவருக்கொருவர் மரணபரியந்தம் விசுவாசமுள்ளவர்களாக இருப்பதாக வாக்குப் பண்ணினார்களோ, அன்றே தேவன் தாமே மோட்சவாசலைத் திறந்துகொண்டு, விசேஷ தேவதிரவிய அனுமான வரப்பிரசாதங்களுடன் அவர்கள் மீது இறங்கிவந்து, குடும்ப வாழ்க்கையை நிறுவி, அதைத் தம்மக்களின் அன்பினாலும், அக்களிப்பினாலும் நிரப்பும் அந்தப் பிரமாண்டமான வேலையில் அவர்களுக்கு உறு துணையானார்."

ஆனால், இவற்றிலும் கூடிய சம்பந்தம் சருவேசுரனுக்கும் மெய்விவாகத்துக்குமிடையில் உண்டு. ஏனெனில், அவர்மட்டுமே அதன் நோக்கத்தை நிர்ணயித்து அந்நோக்கம் நிறைவேறுவதையும் சாத்தியமாக்கிவிட்டார். மெய்விவாகத்தின் முதல்நோக்கம் பிள்ளைகளைப் பெறுதலே. இதுவும் ஒருவித சிருஷ்டிப்பு. சிருஷ்டிக்கும் அதிகாரம் முறையின்படி உன்னத தேவனுக்கு மட்டும் உண்டு. எனவே, மனிதனிடமும் அவ்வதிகாரம் உண்டெனின், மனிதவர்க்கத்தை மெய்விவாகமூலம் பெருக்குவதற்குத் தீர்மானித்தஅன்றே தேவன் அவ்வுரிமையை மனிதனுக்குக் கொடுத்தார் என்பதுதான் அர்த்தம். தேவன் தமது சித்தத்தைத் தமது பிரதிநிதிகளான பாப்புமார், மேற்றிராணிமார், குருமார் வழியாகவே இவ்வுலகில் வெளிப்படுத்தி வருகிறார். ஆதலால், குடும்பவிடயங்களுக்கும், குருமாருக்கும் தொடர்பில்லை; வேதத்தைப் போதிப்பதே அவர்கள் கடமை என்றுகூறி, குடும்ப சம்பந்தமான அவர்களின் ஆலோசனைகளைத் தட்டிக்கழிப்பது, தேவனின் சித்தத்தை அலட்சியம் செய்வதாகும் என்பதைப் புதிய தம்பதிகள் மட்டுமல்ல, அவர்கள் பெற்றோருங்கூட நன்குணரவேண்டும்.

மேலே கூறியவற்றிலிருந்து, தேவனால் அதில் பிரவேசிக்க அழைக்கப்பட்டோருக்கு மட்டும் மெய்விவாகம் உரியது என்பது கண்கூடு. குருத்துவத்துக்கு யார் யாருக்கு அழைத்தல் உண்டென்று சுட்டிக்காட்டியது போல, மெய்விவாகத்துக்கு யார் யாருக்கு அழைத்தல் உண்டு என்று சுட்டிக்காட்டுவது சற்றுச்சிரமமாகும். ஆனால், யார் யாருக்கு அழைத்தல் இல்லை என்பதை எடுத்துரைப்பது அத்துணை சிரமமானதல்ல. இளம் பெண்களும் வாலிபரும் மெய்விவாகத்துக்குத் தமக்கு அழைத்தல் உண்டா இல்லையா என்பதை அறிந்துகொள்வதற்கு மேல்வரும் பகுதிகள் பெரிதும் உதவியாக இருக்குமென நம்புகிறோம். தமது சொந்த வாழ்க்கையை மட்டுமல்ல, தாம் தேர்ந்தெடுக்கும் துணைவன் அல்லது துணைவியின் வாழ்க்கையையும் பாழாக்காது தடுப்பதற்குக் கீழே தரப்படும் குறிப்புகள் துணையாக இருக்குமென்பது ஒருதலை.

**1. குழந்தைகளை விரும்பமுடியாதவர்களுக்கு மெய்விவாகத்துக்கு அழைத்தல் கிடையாது.** குழந்தைகளே இல்லறவாழ்வின் இயற்கைக் கனிகள். ஆகவே, குழந்தைகளை நேசிக்க முடியாதவர்கள் கலியாணம் செய்ய விரும்புவது, நோயாளிகளை அருவருத்து அவர்களை அணுக விரும்பாதவர்கள் மருத்துவராக வர விரும்புவதை ஒத்ததாகும்.

**2.** சிலர்தாம் எதிர்பார்த்தவாறு ஓர் ஆண்மகவைப்பெறாது பெண்மகவைப் பெற்றுவிட்டால் அதையிட்டுக் கவலைப்படுவதுமுண்டு. வேறுசிலர் குழந்தையின் கறுப்பு நிறத்தைக்கண்டுகூடக் கவலைப்படுகிறார்கள். இங்ஙனம் தேவனின் சித்தத்தின்மீது தம் சித்தத்தை திணிக்கப்பார்ப்போர்க்கும் மெய்விவாகத்துக்கும் வெகுதூரம். தேவனின் சித்தத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லாவிட்டால் அவர்கள் மெய்விவாகம் செய்யக்கூடாது.

**3.** சிலர் தாம் பிள்ளைகளை நேசிக்கின்றோம் என்பார்கள். ஆனால், அவர்களைப் பெற்றெடுக்கத்தான் அவர்களுக்குப் பிரியமில்லை. பெற்றாலும், அவர்களைப் பராமரிக்க விரும்பமாட்டார்கள். பிள்ளைகளுக்குப் பாலூட்டி, அவர்களைத் தாலாட்டி, குளிப்பாட்டி, அவர்களுக்காக நித்திரை முழித்துக் கஷ்டப்படுவதென்றால் அவர்களால் முடியாது. பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டிவிடும் ஒரு 'பிசியம்மா'விடம் இக்கடமைகளை ஒப்படைத்துவிட்டு, கண்ணுக்கெட்டாத்தூரத்துக்குக்கூடச் சென்று பணம் சம்பாதிப்பதிலோ சமூகத் தொண்டிலோ ஈடுபடுகிறார்கள். பிள்ளையைவிட பணம், பதவி, பெயர், சொகுசு என்பனதான் அவர்களுக்குப் பெரியது. "பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த மக்கட்பேறு அல்லபிற" என்றார் வள்ளுவபிரான். மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம், அவர்கள் சொற்கேட்டால் செவிக்கின்பம் என்பதை இவர்கள் அறியாரோ? இத்தகைய தாய்மாரின் கொடுமைதான் என்னே! இவ்வாறு **பிள்ளைகளைப் பெறவிரும்பாதவர்களுக்கும், பெற்றபின்னர் அவர்களைப் பராமரிக்க விரும்பாதவர்களுக்கும் மெய்விவாகத்துக்கு அழைத்தல் இல்லையெனலாம்.**

**4. சுயநேசம் படைத்தோர்க்கும் அழைத்தலில்லை.** சிலர் தம்மையன்றிப் பிறரை நேசிக்க முடியாத தன்மையை அடைந்துவிடுகிறார்கள். சுயநலம் இல்வாழ்க்கையை நிர்மூலமாக்கும் நச்சு மருந்து. ஒருவருக்கொருவர் தம்மைப்பூரணமாக அர்ப்பணம் செய்யக்கூடியவர்களுக்குத்தான் மெய்விவாகத்துக்கு உண்மையான அழைத்தல் உண்டு. "பிறர் உனக்கு என்ன செய்யவேண்டுமென்று நீ விரும்புகிறாயோ நீயும் அதை அவர்களுக்குச் செய்" என்பதே கிறீஸ்தவ சீவியத்தின் இரத்தினச் சுருக்கமும் கூட. உதாரணமாக, தனதுகணவனுக்கும் தனக்கும் இருப்பதுபோன்ற அதே பற்றும் பாசமும் அவனுடைய பெற்றோர் சகோதரர்மீதும் உண்டென்பதை ஒரு மனைவி மறக்கக்கூடாது. அப்படியல்லாது தன்னைத்தானே மட்டும் நேசித்துக்கொண்டு, தன் துணைவி அல்லது துணைவனின் ஆசைகளைத் தட்டிக்கழிக்கக்கூடிய ஆணுக்கோ பெண்ணுக்கோ அழைத்தல் இல்லை.

**5. தன்னடக்கமில்லாதோர்க்கும் அழைத்தல் இல்லை** மனம்போன போக்கில் தன்னிச்சைகளுக்கெல்லாம் இடங்கொடுத்து சாலை நடனங்களுக்கும் சந்தேகத்துக்குரிய இடங்களுக்கும் செல்லாதிருக்க முடியாதவர்களுக்கு மெய்விவாகத்துக்கு அழைத்தல் கிடையாது. தன் கணவனை அல்லது மனைவியைப் பிரிந்து சுதந்திரப் பறவையாகப் பறந்துதிரிய விரும்புவோர்க்கும் மெய்விவாகத்துக்கும் எட்டாம் பொருத்தம்.

மெய்விவாகமானது மனப்பலமுடையோர்க்கும் தியாகங்கள் செய்து, குடும்பச்சுமைகளைச் சுமக்கும் வல்லமையுடையோர்க்கும் உரியது. பிள்ளைகளைப் பெற்று, நேசித்துப் பராமரிக்கக்கூடியவர்களுக்கு உரியது. சுயநலமற்றோர்க்கும் தன்னடக்கமுடையோர்க்கும் உரியது.

---

# மங்கா மணிவிளக்கு

எங்கள் மகள் மலர் ஒரு திருக்குடும்பக் கன்னியாஸ்திரி. அவரின் பெயர் சிஸ்ரர் மேரியோசவ். அவரைப்பற்றி நாங்கள் கவலைப்பட எவ்வித முகாந்தரமுமில்லை. அவர் சுகசேமமாகவிருக்கிறார். உலகத்தில் மக்கள்பெறக்கூடிய பரிசுத்தமும் பாக்கியமுமான அந்தஸ்து அது. நேசமும் மதுரகுணமும் உள்ள பலருடன் அவர் சேர்ந்துவாழ்கின்றார்.

மலர் மிகவுஞ் சந்தோஷமாகவிருக்கிறார். கன்னியாஸ்திரியாக வந்த முதலாம்வருடத்தில் முதலாக அவர் சந்தோஷமாகவே இருந்தார். அக்காலத்தில் சிலதருணங்களில் வீட்டுப்பாசம் அவரைவருத்தியதுமுண்டு.

மலருக்கு இயற்கையாகவே வீட்டுப்பாசம்அதிகம். அவருக்கு இரண்டாம் பராயமாக இருந்த காலத்தில் எங்களுக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அக் குழந்தையின்மேல் அவருக்கு நிறைந்தஅன்பு. குழந்தையின் தொட்டிலுக்கருகாமையில் நெடுநேரம் நிற்பார். குழந்தை நித்திரையாகவிருக்கும்போதுமுதலாய்த் தொட்டிலுக்கருகாமையில் பார்த்துக்கொண்டிருப்பார். தொட்டிலில் அவரின் கைபட்ட அடையாளங்கள் நிரம்பஇருக்கும். குழந்தை தூக்கம்கலையும்வரை நீபோய் விளையாடு என்றாலுங்கூட மலர் அவ்விடத்தை விட்டு நகரமாட்டார்.

மலர் தமது வீட்டுப்பாசத்தைத் தேவஅழைத்தலுக்காகத் தியாகஞ் செய்தார். தமது கன்னியாஸ்திரி அந்தஸ்தின் மகத்துவத்தை நன்குவிளங்குவதற்கு அந்தத்தியாகம் மிகஉதவியாக இருந்தது. எல்லா அந்தஸ்துகளிலும் தியாகமும், சுயமறுப்பும் மிக அவசியம்.

மலர் திருமணஞ் செய்துகொண்டிருந்தாற்கூட அதில் பலதியாகங்கள் செய்ய நேரிட்டிருக்கும். பிள்ளைகளை மிகுந்த வருத்தப்பட்டுப் பெற்றெடுத்திருக்கவேண்டும். குடும்ப நிர்வாகப் பொறுப்பை ஏற்கவேண்டும். பிள்ளைகளை வளர்ப்பதில் சிரமப்படவேண்டும். மக்கள் நோய்வாய்ப்பட்டிருக்குங்காலை அவர்களைப்பாமரிக்கவேண்டும். பிள்ளைகளின் படிப்பு, ஒழுக்கம் முதலியவற்றைப்பற்றிக் கவலைப்படவேண்டும். தற்செயலாக அவர்விதவையானால் பிள்ளை[illegible] இன்னல்களை அனுபவிக்கவேண்டிவரும். உலகில் உள்ள ஒவ்வொருவரும் ஏதோ ஒருவகையில் துன்பங்களை அனுபவித்தே ஆகவேண்டும்.

ஆனால், சந்நியாச அந்தஸ்தில் ஏற்படும் துன்பங்களிலும்பார்க்க, அதில் கிடைக்கும் சம்பாவனைகள் அதிகம். கடவுளுக்காகத் தங்கள் பெற்றோர், உற்றார், உறவினரைத்துறந்து பரித்தியாகஞ் செய்பவர்களுக்கு ஒன்றுக்குநூறு மடங்கு சம்பாவனை கொடுப்பதாகக் கடவுள் கூறியிருக்கிறார்.

மலர் கன்னியாஸ்திரி மடத்திலிருக்கும்போது பெற்றோர் ஆகிய எங்களுக்கு அவர் ஒரு காவலான சம்மனசுபோல இருக்கிறார். தமது சிறிய தம்பியை அவர் கண்காணித்ததுபோல எங்களையும் கண்காணிக்கிறார். எங்களின் மகள் கடவுளுக்குமிகச்சமீபமாகவிருக்கிறார். எங்கள் ஆன்மசரீர நன்மைகளுக்காக அவரும், அவரின் சகோதர கன்னியாஸ்திரிகளும் அனுதினமும் பிரார்த்திப்பார்கள் என்ற எண்ணம் மனதுக்குப் பேருவகை ஊட்டும்.

மலர் கன்னியாஸ்திரி மடத்துக்குப் போனதினால் எங்களுக்கும் துயரம் ஏற்பட்டது. எங்கள் வீட்டுக்குள் இருந்து எரிந்துகொண்டிருந்த ஒரு சுடர் விளக்கு வெளியேசென்றது போன்ற ஓர்உணர்ச்சி எங்களுக்கு ஏற்பட்டது. ஆனால், எங்கள் வீட்டுக்குள் சுடர் விட்டெரிந்து கொண்டிருந்த விளக்கு கடவுளின்சந்நிதானத்தில் எரியும் நித்திய விளக்காகமாறிற்று என்னும் மகிழ்ச்சி எங்களுக்குஏற்பட்டது. விரத்துவ அந்தஸ்துக்குத் தங்கள்பிள்ளைகள் போகாது தடைசெய்த குடும்பங்களில் ஏற்பட்டதுபோன்ற குடும்பக் கோளாறுகள், தாறுமாறுகள், துன்பதுரிதங்கள் ஒன்றும் எங்களுக்கு ஏற்படவில்லை.

நாங்கள் மலர் கன்னியாஸ்திரிமடத்துக்குப்போனதையிட்டுக்கவலைப்படாததற்கு ஒருகாரணம் உண்டு. நாங்கள் இளந்தம்பதிகளாக இருந்தபோது எங்களுக்கு முதற்பிள்ளையாக ஓர் ஆண் மகவுபிறந்தது. அப்பிள்ளையைஉன்னி நாங்கள் பல ஆகாயக்கோட்டைகள் எல்லாங்கட்டியிருந்தோம். ஆனால், அக்குழந்தை சிலமாதங்களில் பரமபதமடைந்துவிட்டது. எங்கள் ஆகாயக் கோட்டைகள் எல்லாஞ் சுக்குநூறாகத்

(அடுத்த பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குடும்பக் கன்னியரும் உயர்தரக் கல்வியும்

— ஆசிரியர் F. C. துரைசிங்கம் —

யாழ்ப்பாண விக்காரியத்தின் ஆளுகையை 1857-ம் ஆண்டின் பிற்பகுதியில் கையேற்ற மகாவந்தனைக்குரிய சமேரியா ஆண்டவர் அவர்கள் தமது மேற்பிராசனத்தில் சிறுபிள்ளைகளைப் படிப்பிக்கும் தொழிலைக் கொண்டு நடத்தக் கன்னியாஸ்திரிமாரின் சேவையைப் பெரிதும் நாடலாயினர். அந்நாட்களில் "போர்தோ" நகரில் நவமாய் ஸ்தாபிக்கப்பட்ட திருக்குடும்பக் கன்னியர்கூட்டம் அமலோற்பவ நாயகி சபைப் பரித்தியாகிகளின் தலைவரான ஆசா. மசெனட் ஆண்டவர் அவர்களின் கண்காணிப்பின்கீழ் இருந்துவந்தது. ஆகவே 1862-ம்ஆண்டில் சமேரியாஆண்டவரின் கோரிக்கைக்குஇணங்கிய திருக்குடும்பக் கன்னியர் அறுவர் யாழ்ப்பாணத்திருச்சபையில் திருத்தொண்டாற்றுமாறு சமேரியா ஆண்டவர் அவர்களால் கொண்டுவரப்பட்டனர்.

முதன்முதலாக அக்கன்னியாஸ்திரிமார் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த ஆங்கில உத்தியோகத்தரின் பிள்ளைகளுக்கு ஆங்கிலம் கற்பிக்கும் வேலையையும், அநாதைப்பிள்ளைகளைப் பராமரிக்கும் பொறுப்பையும் கையேற்றனர். பின்னர் யாழ்ப்பாணப் பிள்ளைகளுக்கு ஆங்கிலம் கற்பிக்கவும், சுதேச கன்னியாஸ்திரிமாரைப் பயிற்றித் தமிழ்க்கல்வியை ஊட்டவும் தொடங்கினார்கள். அக்காலத்தில் அடியிடப்பட்ட ஆங்கிலப் பள்ளிக்கூடம் பற்பல தலைமைத் தாயார்மாரின் கீழ் சிறிது சிறிதாகப் பருத்து, கேம்பிறிச் சர்வகலாசாலைக் கனிஷ்ட, சிரேஷ்ட தாரதரப் பத்திரப்பரீட்சை வகுப்புகளை நடத்தும் அளவிற்கு வளர்ந்து கொண்டு வந்தது.


1930-ம் ஆண்டளவில் சங். செபஸ்ரியன், லோயோலா முதலிய தாயார்மாரின்கீழ் இவ் உயர்தர வகுப்புகள் நன்கு வேரூன்றத்தொடங்கின. காலாகாலத்தில் பள்ளிக்கூடத்தின் வளர்ச்சியை மேலோங்கச் செய்ய அயரா ஊக்கம்கொண்ட சங். இவஞ்சலிஸ்ற் தாயார் பள்ளிக்கூடத்தலைமைப் பதவியேற்ருர். அவர் அப்பதவிக்கு வருமுன் கேம்பிறிச் சீனியர் வகுப்பில் இரண்டு மூன்று பிள்ளைகளும், யூனியர் வகுப்பில் பத்துக்குட்பட்ட பிள்ளைகளுமே படித்துவந்தனர். அவர் வந்த காலத்தில் யாழ்ப்பாணமக்களும் தங்கள் பிள்ளைகளுக்கு உயர்தரக்கல்வி பயிற்றவேண்டுமென்ற ஆர்வம் கொண்டனர். ஆகவே உயர்தரவகுப்புகள் பத்து, இருபது, முப்பது பிள்ளைகளைக் கொண்டனவாயும், இரண்டு மூன்று பிரிவுகளை யுடையனவாயும் இயங்கத் தொடங்கின. அப்பொழுது பள்ளிக்கூடத்தின் தாரதரத்தைச் "C" நிலையிலிருந்து "B" நிலைக்கு உயர்த்த வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அவ்வேற்பாடுகளுக்கேற்பச் சிற்சில பட்டதாரிகளை ஆசிரியைகளாகச் சேர்க்கவேண்டியதாயிருந்தது. கத்தோலிக்க பெண்களுக்குள் சர்வகலாசாலைப்பட்டம் பெற்ற பெண்கள் இல்லாதபடியால் வேறு ஆசிரியைகளை நியமிக்கவேண்டியிருந்தது. இக்குறையை நீக்க மனதிற்கொண்ட சங். இவஞ்சலிஸ்ற் தாயார் நுண்கலைப் பகுதியிலாவது கத்தோலிக்க பெண்களுள் பட்டதாரிகளை உற்பத்தி செய்ய வேண்டுமென்று விழைந்து லண்டன் சர்வகலாசாலைப்பட்டம் பெறுவதற்கு வேண்டிய லத்தீன், சரித்திரம், பொருளாதாரம் முதலிய துறைகளில் பல மாணவிகளைப் பிரத்தியேகமாகப் பயிற்றிவந்தார்.

அவரது அயரா உழைப்பினுல் அவர் இளைப்பாறுமுன்னரே சில பட்டதாரிகளைப் பயிற்றிப் பட்டதாரி வகுப்புகளுக்கு ஆழமான அஸ்திவாரத்தை நிறுவினர். அவரின்பின் தலைமைப் பதவியேற்ற சங். யோசேப்பின் தாயாரும் அவரிட்ட அத்திவாரத்தைத் தொடர்ந்து பல பட்டதாரிகளைப் பயிற்றினர். இப்பொழுது இவ்விரு தாயார்மாரின் உழைப்பின் பயனுகப் பல கன்னியாஸ்திரிமாரும், பழைய மாணவிகளும் பட்டதாரிகளாகி யாழ்ப்பாண மடத்தில் மாத்திரமன்றி வேறு பள்ளிக்கூடங்களிலும் தலைமை ஆசிரியைகளாகவும், உதவி ஆசிரியைகளாகவும் கடமையாற்றி வருகின்றனர்.

விஞ்ஞானப்பகுதியும் திருக்குடும்ப மடத்தில் தற்பொழுது மடத்துத்தலைமைத்தாயாராயிருப்பவராகிய சங். கிளேயர் தாயாரால் வெகுசிரத்தையுடன் அபிவிருத்தி செய்யப்பட்டது. பலவருடங்களாக ஆராய்ச்சிக்கூடமின்றிச் சித்திகரமாக தாவரசாஸ்திரம் கற்பித்தபின் சர்வகலாசாலைப் புகுமுக வகுப்புக்குத் தேவையான ஆராய்ச்சிக்கூடத்தை நிறுவிமுடித்த பெருமை அவருக்கே உரியது. இப்பொழுது விஞ்ஞானப்பகுதியும் நன்கு போதிக்கப்பெற்று இலங்கைப் பல்கலைக்கழகப் புகுமுகப்பரீட்சையில் தேறிப் பலமாணவிகள் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பயிற்சிபெற்று வைத்தியராகவும், விஞ்ஞான ஆசிரியைகளாகவும் கடமையாற்றி வருகின்றனர். காலத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப சமஸ்கிருதக்கலை, வீட்டுப்பணித் தாரதரப்பத்திரம், வர்த்தகப்பயிற்சித் தாரதரப்பத்திரம் முதலியனபெறும் பரீட்சைகளுக்குரிய வகுப்புகளும் நவமாகத் தொடங்கி நடைபெறுகின்றன.

நம்நாட்டுப் பெண்கள் எவ்வெத்துறையில் முன்னேற்ற மடையக்கூடுமோ அவ்வத்துறைகள் எல்லாவற்றையும் தேவைக்கேற்றபடி உற்பத்திசெய்து அல்லும்பகலுமாய்க் கண்காணித்து, மடத்துத்தாய்மாரையும், நவசந்நியாச ஆச்சிரமத்தையும், காலத்துக்கு உகந்த முறையில் ஊக்குவித்துப் பராமரித்துப் பாதுகாத்துவரும் அதி சங். மாகாணச் சிரேஷ்டராகிய விசிற்றேஷன் தாயார் தற்போதைய சூழ்நிலைக்குத் தகுந்தவர் என்பது அரசினரின் உதவி நன்கொடையின்றியும் திருக்குடும்ப மடக்கல்லூரி புத்தொளிபெற்று விளங்குவதனுல் புலனுகும்.

இவ்வண்ணம் யாழ்ப்பாணப் பெண்களின் முன்னேற்றத்திற்காக ஒரு நூற்றுண்டு உடல், பொருள், ஆவிமூன்றையும் தியாகம்செய்துவந்த திருக்குடும்பக்கன்னியர் சமாஜம் இன்னும் பலநூற்றுண்டுகளாகப் பலதுறைகளிலும் செழித்தோங்கி வளருமாறு தேவனுக்குத் துதிகூறிப் பிரார்த்திப்போமாக.




# திருக்குடும்பக் கன்னியர் சேவை

இற்றைக்கு நூறு வருடங்களின் முன் துளிர்விட்ட திருக்குடும்பக் கன்னியர் சபை, இன்று ஆல்போல் தழைத்து, அறுகுபோல் வேரூன்றி, செவ்விய முறையில் செயலாற்றுகிறது. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற வாக்கியத்தை விருதுவாக்கியமாகக் கொண்டு, கடமையிலே கண்ணுங் கருத்துமாய்ப் பணியாற்றுகிறது. கடமையுணர்ச்சியாலும், அன்பு உணர்ச்சியாலும் உந்தப்பட்டு இக்கன்னியர் குழு செய்த சேவைகளோ அளப்பல, கணக்கிலடக்க முடியாதன.

ஆழ்ந்த தெய்வபக்தியும், பரந்த நோக்கமுங்கொண்ட இக் கன்னியரின் சேவை பட்டதாரிகளான பேராசிரியரை, கல்வியில் மேம்பட்ட அறிஞர்களை, தேவதொண்டு புரியும் கன்னியர்களை, குருக்களை இன்று உருவாக்கித் தந்துளது என்பது எவராலும் மறக்க முடியாத உண்மை. சேவா மனப்பான்மை எனும் ஆழ்ந்த கடமையினுல் உந்தப்பட்ட கன்னியர், எதிர்காலத்தில் நாட்டின் உயிர்நாடிகளாக, முதுகெலும்பாக விளங்கப்போகும், சின்னஞ்சிறுர்களை அன்பின் அரவணைப்பிலே, ஒழுக்கமெனும் உரைகல்லிலே, ஒழுக்க சீலர்களாக உருவாக்குகிறது. இந்துசமயத்தவரோ அன்றேல் வேறு சமயத்தவரோ என்ற வேறுபாட்டிற்கு இடமளிக்காது "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற முதுமொழிக்கிணங்க, வேற்றுமைகளைக் களைந்து, ஒற்றுமையுள்ள ஒரு சமுதாயத்தைச் சிருஷ்டிக்கக் கன்னியர் சேவை பயனுடையதாக விளங்குகிறது.

ஆத்மீக வாஞ்சையை, மாணவர் மனதில் ஊட்டி, அன்பெனும் பயிரைப் பசுமரத்தாணிபோல் பதியச் செய்தும், வளர்த்தும், கடவுள்பாற் திருப்பியும், ஒழுக்க சீலர்களாக வாழ வழிசெய்தும், இலௌகீக கலைகளிலே தேர்ச்சிபெற்ற சிறந்த நிபுணர்களாக மாறவும் இக்கன்னியர் அயராது உழைத்தனர். அதுபோல் என்றும் உழைப்பர் என்பது வெள்ளிடை மலை. குற்றம் ஒருவன் செய்தபோது அவனை அன்பாற் திருத்தியும், மிஞ்சிவிட்டால் தண்டனை வழங்கும் நீதியாளராக மாறியும், சமுதாயத்தில் ஒழுக்கமுடைய ஒரு சந்ததியினர் உருவாக, கல்வி அறிவில் மேம்பட்ட அறிஞர் உருவாக வழிவகுத்து விட்டனர்.

சுயநலம் பாராட்டாது சமூக நலனை — பிறர்நலனை உத்தேசித்துச் சேவை செய்ய ஆவல்கொண்டு

— செல்வி ஞேசேஸ் ஜோசவ் —

கடைமாணவர்களுக்கு உற்சாகமளித்தும், ஏனையோரைத் தூண்டியும்,

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத்தக"

என்ற குறளை அடிப்படையாகக் கொண்டு மாணவருளத்தில் எழும் சந்தேக விபரீதங்களைப் போக்கியும் தொண்டுகள் பல புரிந்தனர். மாணவர்களை ஒழுக்கசீலர்களாகப் பயிற்றும் பயிற்சிக்கூடமாகவும் மிளிர்கிறது கன்னியர் மடம்.

இத்தகைய சேவா மனப்பான்மையோடு நாட்டிற்கு நலன்தரு விதத்தில் செயலாற்றிவரும் இக்கன்னியர்களின் சேவை தொடர்ந்து நீடிக்குமாணுல் நாட்டின்சரித்திரமே சிலவேளைகளில் வேறுவிதமாக அமையக்கூடும். வைத்தியசாலைகளிற் சேவைபுரியும் திருச்சிலுவைக் கன்னியர் புரியும் சேவையை அர

(தொடர்ச்சி 10-ம்பக்கம்)

# மங்கா மணிவிளக்கு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தகர்ந்தது. நாங்கள் கடவுளின் சித்தந்தான் நடக்கும்,எங்கள் எண்ணங்கள் ஒன்றும் நடக்காதென்னும் உண்மையை வெகுவிரைவில் உணர்ந்துகொண்டோம்.

பின்னர் கடவுள் எங்களுக்குக் கொடுத்த பிள்ளைகள் ஒவ்வொன்றையும் ஞானவிதமாக அவருக்கு அர்ப்பணஞ்செய்துவந்தோம். பிள்ளைபிறந்தவுடன் "ஆண்டவரே உமக்கு நன்றி. இக்குழந்தையை நீர் எங்களுக்குத் தந்தீர்; ஆனுல், இக்குழந்தை உமக்குச் சொந்[illegible] நாங்கள் இக்குழந்தையை உமக்[illegible] வளர்ப்போம். இக்குழந்தை உம[illegible]சித்தத்தை நிறைவேற்றும்படி வழிகாட்டியருளும்" என்று பிரார்த்திப்போம்.

இந்தப்பிரகாரம் நாங்கள் பிள்ளைகளைச் சருவேசுரனுக்கு ஒப்புக்கொடுப்பதால் பிள்ளைகள் தாங்கள் பராயமடைந்து எந்த அந்தஸ்தில் தேவனுக்குச் சேவைசெய்ய விரும்புவார்களோ அதைச் செய்வதற்கு நாங்கள் தடையாகவிருப்பதில்லை; அதைப்பற்றி நாங்கள் விசனிப்பதுமில்லை.


தேவசித்தம் நிறைவேறுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறேம். பிள்ளைகளும் தேவசித்தத்தை நிறைவேற்றும்போது அடையும் சந்தோஷத்தைக் கண்டுநாங்களும் ஆனந்தமடைகிறேம். எங்களுடைய மகள்ஒருவர் எங்களுக்கு ஐந்துபேரமக்களைப்பெற்றுக்கொடுத்து மகிழ்வித்தார். மகன்ஒருவர் ஒருபேரமகனைப் பெற்றுக்கொடுத்தார். ஆனுல், சிஸ்ரர் மேரியோசவ் எங்களுக்கு வகுப்பறையில் ஆயிரக்கணக்கான ஞானப்பேரமக்களைப் பெற்றுக்கொடுக்கிருர். அப்பிள்ளைகளுக்கு அவர் கடவுளையும், வாழ்க்கையின்நோக்கத்தையும் கற்பித்துத் தேவனுக்கு ஆத்துமங்களை ஆதாயப்படுத்துகிருர். அவர் மங்காத நித்திய சுடர்விளக்காகத் தெய்வசமூகத்தில் எரியவேண்டும் என்பதே எங்கள் பிரார்த்தனை.

ஒரு கன்னியாஸ்திரியின் தாயார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் திருக்குடும்பக்கன்னியாஸ்திரிகளின் ஒருநூற்றுண்டுத் தியாகமும், சேவையும்

கத்தோலிக்க திருச்சபையின் "சிரேஷ்ட புதல்வி" என்று வர்ணிக்கப்படும் பிரான்ஸ் தேசமானது இலங்கைக்குப் பொதுவாகவும் யாழ்நகருக்குக் குறிப்பாகவும் பல கத்தோலிக்க சமயக்குருவர்களையும், கன்னியாஸ்திரிகளையும் அனுப்பியிருக்கிறது. அவர்களின் வாழ்க்கை எங்கள் மத்தியில் தியாகத்தினதும், சேவையினதும் எடுத்துக் காட்டாக மிளிர்கின்றது. அவர்கள் தங்கள் உயிரையும் உடலையும் தங்களின் சுவீகாரத் தாய்நாடாகிய இலங்



யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்

கைக்கு அர்ப்பணஞ் செய்தனர். அவர்களுடைய சுயநலமற்ற சேவை சரித்திரத்தில் முதலிடம் பெறவேண்டிய சம்பவமன்றோ! அவர்களுடைய புண்ணிய வாழ்க்கையைப்பற்றியும், பரிசுத்ததனத்தைப்பற்றியும் தேவனே பூரணமாக அறிவார். அவர்கள் ஒரு அந்நியநாட்டுக்கு வந்தார்கள். பாஷை, சமயம், கலாசாரம், உடைநடை உணவு, சீதோஷ்ணநிலை முதலிய வேற்றுமைகளுக்கிடையில் வாழ்க்கை நடத்தவேண்டியவர்களாய் இருந்தனர். தங்களை ஒறுத்துப் பிறருடைய நன்மைக்காக, கல்வியின் முன்னேற்றத்திற்காகச் சிக்கனவாழ்க்கை வாழ்ந்தனர். பேருக்கோ புகழுக்கோ சேவை செய்யாது, கைம்மாறு எதிர்பாராது கடமை புரிந்து ஈற்றில், "அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்னும் பொய்யாமொழிப் புலவராம் திருவள்ளுவரின் கூற்றுப்படி தங்கள் என்புகளையும் எங்கள் நாட்டில்விட்டு இறைவனடி சேர்ந்தனர். ஆ! என்ன தியாகம்!!

மேற்போன்ற எண்ணங்கள், சென்ற ஒரு நூற்றுண்டாகச் சிறந்த தொண்டாற்றிய திருக்குடும்பக் கன்னியர் மடத்துக் கன்னியாஸ்திரிகளின் சேவையைச் சிந்திக்கும்போது, நம் மனதில் எழுகின்றன.

**கன்னியாஸ்திரிகளின் வருகை**

இக்கன்னியாஸ்திரிகளின் சபையானது "போர்டோ திருக்குடும்பம்" என்ற பெயருடன் பிரான்ஸ் தேசத்திலே ஸ்தாபிக்கப்பட்டது. இச்சபை ஆரம்பமாகிச் சொற்பகாலத்தில், 1862-ம் ஆண்டு புரட்டாதிமாதம் 16-ந் திகதி ஆறு கன்னியாஸ்திரிகள் இலங்கைக்குக் கடல்மார்க்கமாக அக்கால யாழ்ப்பாண மேற்றிராணியாரான சமேரியா ஆண்டகையுடன் புறப்பட்டனர். சுயெஸ்கால்வாய் அந்த நாட்களில் வெட்டப்படாமையால் கடலாலும் தரையாலும் தங்கள் பிரயாணத்தைச் செய்து கார்த்திகை 2-ந் திகதி யாழ்ப்பாணத்தைவந்து சேர்ந்தனர். இவர்களுக்குத் தலைமைத்தாயாராகச் சங். சிஸ்றர் மேரி சேவியர் என்னும் புண்ணியவதி இருந்தார்.


**கல்விச்சேவையும் கன்னியர்மடமும்**

1850-ம் ஆண்டு திருமதி ஆன் ஓ பிளனகன் என்பவரின் தலைமையில் பெண்களுக்கு ஒரு ஆங்கில பாடசாலை யாழ்நகரில் நிறுவப்பட்டுத் தற்போது வாடி வீடாக இருக்கும் வீட்டில் நடைபெற்று வந்தது. இக் கன்னியர் வந்து சேர்ந்ததும், 1863-ம் ஆண்டில் அப்பாடசாலை இவர்களிடம் பொறுப்பளிக்கப்பட்டது.

1863-ம் ஆண்டு வைகாசிமாதம் 24-ந் திகதி தற்போதைய கன்னியர் மடத்துக்குச் செமேரியா ஆண்டகை அவர்களே மூலக்கல்லை நாட்டினர். இப்புதியமடம் 1869-ம் ஆண்டு முடிவில் கட்டிமுடிக்கப்பட்டுப் பாவனைக்குத் திறக்கப்பட்டது. அந்நாட்தொட்டு இப்பாடசாலையானது திருக்குடும்பக் கன்னியாஸ்திரிகளின் அயராத உழைப்பாலும், ஆசிரியைகளின் ஒத்துழைப்பாலும் ஓங்கி வளர்ந்து, இன்று யாழ்நகரில்— இல்லை இலங்கையிலே பெண்களின் முதற்றரமான கல்லூரிகளில் ஒன்ருகத் திகழுகிறது.

**சபையின் வளர்ச்சியும் விருத்தியும்**

தற்போது திருக்குடும்பக் கன்னியர் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் சுமார் 50,000 மாணவிகளைத் தங்களின் 100 மேற்பட்ட வித்தியாசாலைகளில் கல்விகற்பித்து வருகின்றனர். இச்சபைக் கன்னியர்தொகை இலங்கையில் 650 என்று அறியக்கிடக்கின்றது. இவ்வளவு துரிதமான உயர்ச்சியும் விருத்தியும் இச்சபைத் தலைவித் தாய்மாரின் திறமையாலும் ஊக்கத்தாலுமே பெரும்பாலும் ஏற்பட்டது எனின் மிகையாகாது. இவர்களின் விபரம் பின்வருமாறு: சங். தாயார் மேரி சேவியர் (1862—1878), தாயார்மேரிஎமிலி (1878 — 1800), தாயார் மேரியோசப்பின் (1880—1889), தாயார் சென்ற் பிறுக்சீட் (1889 — 1905), தாயார் மேரி விக்ரோறின் (1905—1926), தாயார் செபஸ்ரியன் (1931 — 1940), தாயார் லோயலா (1940 — 1946), தாயார் யேசுவின் மேரி (1946 — 52), தாயார் [illegible] (1952— ).



ஓடி விளையாடு பாப்பா....

இத்தலைமைத் தாயார்மாரினதும், மாகாணசிரேஷ்ட தாயார்மாரினதும் அரும்பாடுகள் உருவெடுத்தாற்போல் காட்சியளிப்பது பல மாடிகளையுடைய பிரமாண்டமான கல்லூரிக் கட்டிடங்கள். இம்மாகாணச் சிரேஷ்டதாயார்மாரில் தாயார் லெயோனிட், தாயார் கெலன், தாயார் ஷிசிற்றேஷன் என்பவர்கள் விசேட கணிப்புக்கு அருகதையுடையவர்களாயிருக்கின்றனர். இவர்களும் இவர்களுக்குப் பக்கபலமாய் நின்று அயராது உழைத்த கல்லூரி அதிபர்களுக்கும், ஆசிரியைகளுக்கும் யாழ்ப்பாணமக்களின் நன்றி என்றும் உரித்தானதே.



**சபையார் தொண்டு**

இச்சபையார் இலங்கையில் ஆற்றிய தொண்டைப்பற்றிச் சிலாப மேற்றிராணியாராகிய மகாவந். டாக்டர் எட்மண்ட் பீரிஸ், ஓ. எம். ஐ. ஆண்டகை ஒரு சந்தர்ப்பத்தில் கூறிய வார்த்தைகள் இங்கு பொருத்தமாயிருக்கும். "திராட்சைத்தோட்டத்தை முதல்உற்பத்தியாக்கிய வல்லமைவாய்ந்த வீரரமணிகளை நாம் மறவாதிருப்போமாக. அந்நிய நாட்டிலே, பலதுறைகளிலும் அவர்களுக்கு அந்நியரான மக்களின் மத்தியிலே, சீதோஷ்ண கஷ்டங்களைப் பொருட்படுத்தாது, பசி, வருத்தம், துன்பம் இவைகளைப் பறுவாய் பண்ணுது, பல இடங்களில் பாடசாலைகளையும், மடங்களையும், பயிற்சி நிலையங்களையும் ஆரம்பித்தனர். இவ்வித ஸ்தாபனங்களுக்கு வேண்டிய பணத்தைத் தங்கள் சிக்கன வாழ்க்கையாலும், கஷ்டமான உழைப்பாலும் தனவந்தரிடம் தருமம் கேட்டும் சேகரித்தனர். மேற்றிராசனங்களோ, பொருளாதாரம் குறைந்த நிலையில் அந்நாட்களில் இருந்தன. ஆனல், இவ்வித கஷ்டங்களை எல்லாம் மேற்கொண்டு தேவனுக்கு உந்நதமான தொண்டைச் செய்துவந்திருக்கின்றனர் இவர்கள்.

"ஆரம்பகாலங்களில் பலகஷ்டங்கள் இருந்தே தீரும். என்றாலும் நாங்கள் அக்காலத்து மககளின் வாழ்க்கையை ஆராயும்போது பிறர் சிநேகத்துடனும், அனுதாபத்துடனும் அவற்றை உற்றுநோக்க வேண்டும்.

"அவர்களுடைய குற்றங்களுக்குக் குருடராயும் அவர்களுடைய புண்ணியங்களைப் புகழுபவர்களாயும் நாமிருப்பது நல்லதன்றோ!"

# தன்னலமற்ற தூயசேவை

இறைவனது படைப்புக்களில் மானிடப்பிறப்பே பெறற்கரிய உயர்படைப்பாக இருக்கிறது. இருப்பினும் மானிடர் யாவருமே உயர்குணம்கொண்ட உத்தமர்களாக, உண்மைமிகு பண்பாளர்களாக இருப்பதில்லை. மனிதன் உயர்நிலைஅடைய அவனது எண்ணங்களும், செயல்களும், நடத்தைகளுமே காரணமாக இருக்கின்றன. ஆம்! அவன் உயரியசிந்தனைகள் கொண்டவனுக— நற்செயல்கள் புரிபவனுக— நல்லொழுக்க வழிசெல்லும் நெறியாளனுக வாழவேண்டும். இத்தகைய பண்புகள் கொண்ட ஒருவனுக்கு இயல்பாகவே சேவைபுரியும் மனப்பான்மையும் வந்துவிடுகிறது.

போட்டி, பொருமை, பூசல் மலிந்துவிட்ட இக்காலத்தில் சேவா உணர்ச்சி மிக்கவர்கள் அரிதாகவே காணப்படுகிருர்கள். மக்கள் மனதில் இறைவிசுவாசம் அற்றுப்போகத் தன்னை உணராதவனுக; நல்லது தீயது அறியாதவனுக; அறிய விரும்பாதவனுக; எப்படியும் வாழலாம் என்ற கொள்கைக்கேற்ப மற்றவனை நசுக்கியாவது தான் வாழ முற்படுகிருன். பொதுவாக இன்றைய மக்கள் மனநிலை இதுவாகத்தானிருக்கிறது. கடமை புரியாது உரிமை கோரிப் போராடும் மக்கள்தொகை பெருகிவிட்டபோது, அவர்கள் மனதில் சேவை மனப்பாண்மை எங்ஙனம் தோன்ற முடியும்?

அதேநோக்கில் கத்தோலிக்கப் பாடசாலைகளில் கடமையாற்றும் கன்னியாஸ்திரிகளை எண்ணும்போது, அவர்களின் தன்னலமற்ற சேவையைப் புகழாமல் இருக்க முடியாது. ஆம்! அவர்கள் செய்வது தொழிலன்று — தூயசேவை! நான் கத்தோலிக்க பாடசாலையொன்றில் படித்தவள்; கன்னியாஸ்திரிகளின் எறும்பொத்த சுறுசுறுப்பையும், ஊக்கமிகு உழைப்பையும் கண்கூடாகக் கண்டவள் என்ற முறையில்தான் அவர்களது சேவையை நன்றிகலந்த உணர்வோடு புகழக்கூடியதாக இருக்கிறது.

"தொண்டு புரிதல்" என்பது இலேசானதல்ல. அன்பு, தயை, தியாகம், பொறுமை, அடக்கம் போன்ற பண்புகள் வாய்ந்தவர்கள்தான் உண்மையான தொண்டை, களங்கமற்ற உள்ளத்தோடும் செய்ய முடியும். பிறருக்குச் சேவை செய்வதற்கே தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களாக இக்கன்னியாஸ்திரிகள் திகழ்கிருர்கள். அப்படிப்பட்டவர்கள் ஆசிரியத்தொழிலைப் பொறுப்புணர்ச்சியுடன் ஆர்வமாகச் செய்கின்ருர்கள். அதனுல் இவர்களால் நடாத்தப்படும் பாடசாலைகள் நன்முறையில் இயங்கி வருவதோடு கல்வித்தரத்திலும் சிறப்பாக விளங்குகிறது. கல்வி மதச்சூழ்நிலையில் புகட்டப்படும்போது, மாணவர்களின் அறிவு நேரியவழியில் விருத்தியடைவதோடு இறையச்சமிக்க ஒழுக்கசீலர்களாகவும் அவர்கள் வளருகின்ருர்கள். இத்துணை நல்ல அம்சங்களை உள்ளடக்கிய கன்னியாஸ்திரிகளின் ஆசிரியசேவையை நன்றிகனிந்த மகிழ்வு பொங்கும் மனத்தோடுபாராட்டி நூற்றுண்டுவிழாச் சோபனம் கூறுகிறேன்.

— திருமதி அகமதா ஜிப்ரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுத்த பாப்பரசர் தினம்—4-11-62

வருடாவருடம் திருச்சபையானது அவ்வக்காலத்துப் பாப்பரசர் முடிசூட்டப்பட்ட தினத்தைப் பாப்பரசர்தினமாகக் கொண்டாடுகிறது. இப்போது உலகசமாதானத்தின் ஒப்பற்றதந்தையாக, வத்திக்கான் இராச்சிய பூபதியாக, கத்தோலிக்க திருச்சபையின் தலைவராக இருக்கும் பாப்பரசர் 23-ம் அருளப்பர் ஆவர். இவர் 1958-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 4-ந்திகதி பாப்புவாக முடிசூட்டப்பட்டார். இவரின் முடிசூட்டு தினத்தையே நாம் இவ்வருடம் பாப்பரசர் தினம் என்கிறோம். பாப்பரசர் என்றால் பொதுவாக யார் என்றகேள்விக்குப் பலவிடைகள் கூறலாம். "அவர் கிறீஸ்துநாதரின் பிரதிநிதி; எம் சத்திய திருச்சபையின் பிரத்தியட்சமான உத்தம தலைவர்; சர்வவல்லப தேவனின் எக்காளத்தொனி; உலகம் கண்டதிசயிக்கும் பளிங்கனைய தூயவரம்—வழுவாவரம்— அழியாவரம்படைத்த தளபதி; சத்தியத்தின் பிரகாசத்தூண்; ஒழுக்கத்தின் பொற்சின்னம்; நீதியின் உரைகல்; பரிசுத்ததனத்தின் ஊற்று; மூவுலகங்களையும்தாங்கி ஏந்திநிற்கும் முழுவைர மணிக்கல்; காரிருள்கவிந்து நிற்கும் உலகத்தின் பேரொளிபரப்பும் கனக மணிச்சுடர்; இடாம்பீக வெப்பத்தாற்கருகும் இவ்வுலகிற்குக் குளிர்ச்சியும், சாந்தியும்நிறைக்கும் குளிர்நிலா; மாசற்ற பரலோகதிரவியங்களை வைத்திருக்கும் மணிப் பொக்கும் அவர்; மோட்சத்தின் திறவுகோல் அவரது திருக்கரங்களிலே இலங்குகிறது; அவர் நரகலோகம் வெல்லரிய திருச்சபையைச் சுமந்துநிற்கிறார்; அசையாப் பாறையாயிருக்கிறார்; அஞ்சாநெஞ்சினராய் மிளிர்கிறார்; அவரது புனிதமும், பேரழகும் போற்றிப்புகழ வார்த்தைக் கடங்கா" என்றெல்லாம் எடுத்துக் கூறப்படுகிறது.

இப்போது சம்பேதுருவானவரைப் போல 263-ம் பாப்பரசராக இருப்பவர் பரிசுத்ததந்தை 23-ம் அருளப்பர் ஆவர். அவர் முடிசூட்டப்பட்ட 4-வது ஆண்டுதினத்தை இம்முறை கொண்டாடுகிறோம். இவர் 1881-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 25-ந்திகதி பிறந்தார். ஆகவே, இவருக்குவயது 81முடிகிறது. என்றாலும் மிகவும்இளமை பொருந்திய பொலிவுடன் காட்சியளிக்கிறார். அவரை நேரில்பார்த்தபலர் இலங்கையில் இருக்கின்றனர். கொழும்பு அதிமேற்றிராணியார் மகாவந். தோமஸ் கூறே ஆண்டகை அவரை வெனிஸ்நகரத்துப் பிதாப்பிதாவாக இருந்தபொழுது சந்தித்துப்பேசினராம். "இச்சம்பாஷணையின்போது அதிகமாக எனதுமனதிற்பட்டவை யாதெனில், அவருடைய அன்பாதரவும், எவரோடும் சாமானிய மனிதரைப்போல அளவளாவிப்பழகும் குணமுமே" என்று குறிப்பிட்டிருக்கிறார். எங்கள் அன்புக்குரிய மேற்றிராணியார் பொதுச்சங்கத்திற்குரோமை நகருக்குப் போயிருக்கிறார். அவரும் எங்கள் பரிசுத்ததந்தையைக்கண்டு பேருவகை யடைகின்றார் அல்லவா? ஒருநிருபர் எங்கள் பரிசுத்த தந்தையின் பொது இலட்சணங்களை, "அவர் அனைவரையும் அரவணைக்கும் அன்பர்; ஏழைஎளியவர்கட்கு நண்பர்; வெள்ளை உள்ளத்தவர்; தாழ்ச்சிநிறைந்தவர்; பன்மொழி வல்லுனர்; பழுத்த எழுத்தாளர்; சிறந்த பேச்சாளர்; கருத்தான குறள்கூறும் வள்ளுவர்; அரசியல் நிபுணர்; சமாதானப் பிரியர்; ஆர்வம்மி[illegible]த ஆயர்" என்று சிறப்பாக வரைந்தி[illegible]கிறார். இன்னுமொரு நிருபர் இவரைப்பற்றிப் பின்வருமாறு விளக்குகிறார்: "13-ம் சிங்கராயரின் அறிவுத்திறனும், 10-ம் பத்திநாதரின் அருட்திறனும், 15-ம் ஆசீர்வாதப்பரின் மதிநுட்பத்திறனும், 11-ம் பத்திநாதரின் ஆன்மவாஞ்சையும், 12-ம் பத்திநாதரின் இராசதந்திரமும் நிறைந்து, மதிகெட்டுவாழும் மக்களுக்குக் கதிகாட்டும் கப்பலோட்டியாய்ச் சிறந்து அர்ச். 10-ம் பத்திநாத பாப்பரசரின் சிநேகிதனான 23-ம் அருளப்ப பாப்பரசர் விளங்குகிறார்."

இவ்வளவு பாராட்டுகளுக்கும் அருகதையான எங்கள் பரிசுத்ததந்தை 23-ம் அருளப்ப பாப்பரசர் மிகவும் தாழ்மையான பிறப்பும், கொள்கையும் உடையவர். யேசுக்கிறீஸ்து நாதரைப் போல் ஒருசாதாரண விவசாயியின் குடும்பத்திலேயே பிறந்தார். இவர் இடையிடையே "நான் ஓர் எளியகுடும்பத்தில் தோன்றியவன்" என்று எடுத்துக்கூறுவதில் பெருமைகொள்ளுவார். அவர் பாப்பரசராகத் தெரிவுசெய்யப்பட்டபோது, பிரியமக்களே! நாம் இந்தப் பெரும்பாரத்தை ஏற்றுக்கொள்வது தேவசித்தமென்று நமது சகோதரான கருதினால்மார்கள் நமக்கு அறிவித்துள்ளபடியால், இதனை ஒரு சிலுவையாகத் தேவனுடைய திருக்கரங்களிலிருந்து அச்சத்தோடும், பயத்தோடும் ஏற்றுக்கொள்கிறோம்" என்று மிகவும் தாழ்மையுடன் கூறினாராம். ஆனால், அவர் "பெரும் இருதயம் படைத்த ஒருமனிதன்," "மிகுந்த தயாளமுடையவர்," "பத்திவைராக்கியம் நிறைந்தவர்," "அயரா முயற்சியுடையவர்" என்றெல்லாம் அவரை நன்கறிந்த கருதினால்மாரும், ஆயர்களும் கூறுவர்.

அவரை எல்லவரும் சமாதானத்தின் பாப்பரசர் என்று அழைப்பர். அவரும் பாப்பானவராகத் தெரியப்பெற்ற இருபத்திநாலு மணித்தியாலத்துள் அகில உலகமுழுவதற்கும் ஒருசமாதானத்தின் வேண்டுகோளை விடுத்தார். "பிரமாண்டமான யுத்தமுஸ்தீப்புகளைக் கைவிட்டு, நீதியுடன் கூடிய சமாதானத்தை நிச்சயப்படுத்துங்கள். பரஸ்பர விரோதங்களும், பிணக்குகளும் ஏன் தீர்க்கப்படாதிருக்கின்றன? நாடுகளை அபிவிருத்தி செய்வதற்குப் பதிலாக அபாயகரமான யுத்தகருவிகளை உருவாக்குவதிலே ஊக்கமெல்லாம் ஏன் செலுத்தப்படுகின்றன? வாருங்கள்; தைரியத்தோடும், திடநம்பிக்கையோடும் செயலாற்றுங்கள். மேலிருந்து ஒளி உங்கள்மீது பிரகாசிக்கும்." இச்சொற்கள் விசேஷமாக கியூபா, சீனு, இந்தியா பிரச்சனைகள் ஏற்பட்டிருக்கும் இந்நாட்களிலும் பொருத்தமானவையே. உலகசமாதானத்திற்கு உதவியாக அவர் உலக ஒற்றுமையை ஏற்படுத்த முனைந்துநிற்கும் பொதுப்பிதா அவர். கிறீஸ்தவர்களுக்கும், பிறசமயத்தவர்களுக்குமிடையில் இருக்கும் குரோதங்களையும், அபிப்பிராயபேதங்களையும் அகற்ற அயராது உழைத்து வருகிறார். இதற்கு ஒரு முதற்படிபோல் கிறீஸ்தவர்கள் சகலருக்குமிடையில் ஒற்றுமையை ஏற்படுத்திக் கிறீஸ்துவின் சகோதரராகிய எல்லோரும் ஒருகுடும்பத்தவர்போல் சீவிக்கவேண்டுமென்று பெரிதும் முயற்சித்து வருகிறார். "மேற்றிசை நாடுகள், கீழ்த்திசை நாடுகளாகிய எல்லாநாடுகளிலுமுள்ள திருச்சபை முழுமையையும் தந்தைக்குரிய வாஞ்சையுடன் தழுவிப் பிடிக்கிறோம்" என்று தமது சொற்பொழிவிலே கூறியிருக்கிறார். இதற்கு முக்கிய உதவியாயிருந்தது அவர் பல்கேரியா, கிறீஸ், துருக்கி, கொன்ஸ்தாந்திநேபிள் ஆகிய கீழ்த்திசைநாடுகளில் ஆற்றிய அலுவல்களும், மேற்றிசையில் பிரான்சிலும், வெனிஸிலும் பெரும் பொறுப்புகள்ஏற்று அவர்பெற்ற அனுபவமுமே. இம்முயற்சியின் பயனே சென்றமாதம் 11-ந்திகதி ஆரம்பமான 2-ம்வத்திக்கான் பொதுச்சங்கம். இச்சங்கத்தின்மூலம் திருச்சபைக்கும், கிறீஸ்தவ உலகத்துக்கு விசேஷமாகவும், அகில உலகத்துக்குப் பொதுவாகவும் ஒற்றுமையும் சமாதானத்தையும் எம் பரிசுத்ததந்தையானவர் பெற்றுத்தனிக்கிறார். அதற்கு அவர்படும்பாடு அளவு கடந்ததே.

கொந்தளிக்கும் கடல்அலைகள் மத்தியில் கிறீஸ்துவின் திருச்சபையான கப்பலை ஓட்டிச்செல்லும் மீகாமனுகிய பரிசுத்த 23-ம் அருளப்பர் அவர்களுக்கு அவரின் ஞானமக்களாகிய எங்களின் கடமைதான் என்ன? முதன்முதலாக நாம் சருவேசுரனைப்பார்த்து இப்பாப்பரசரின் ஆட்சியை நீடிக்கச்செய்யுமாறு மன்றாடுவோமாக. அவருக்கு ஞானத்தையும், தைரியத்தையும், வீரத்தையும், வெற்றியையும், அன்பையும், தயையையும் அருளுமாறு பிரார்த்திப்போமாக. அத்துடன் திருச்சபையின் கடமைகளை எவ்வித எதிர்ப்புச் சக்திகளுமின்றிச் செவ்வனே ஆற்றவும், அவர் மேற்கொள்ளும் காரியங்கள்—விசேஷமாக இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் 2-ம்வத்திக்கான் பொதுச்சங்கம் நனிசித்திபெறவும் கர்த்தரைநோக்கி அன்புடன் கேட்போமாக.

இரண்டாவதாக எமது பாப்பரசருக்கும், அவரின் பிரதிநிதியாக எங்கள் மேற்றிராணியார், குருமாருக்கும் எமது அன்பு, அமைச்சல், பக்தி, பிரமாணிக்கம் ஆதியவற்றைக்காட்ட முன்வருவோமாக. ஏனெனில், இராயப்பருடன் நாம்ஒன்றுபட்டால்தான் எமக்கு இன்றும் என்றும் உண்டுவாழ்வு. அன்றேல் அனைவர்க்கும் தாழ்வு.

பல்லாண்டுவாழ்க பாப்பரசா!
எங்கும்பரவுக அவர்புகழ்!

பி. ச.

---

மனச்சஞ்சலத்திற்கு இடங்கொடாதே. ஏனெனில், மன அமைதியில்லாவிடில் நீ சர்வேசுரனேடு பேசமாட்டாய். நம்பிக்கையும் தளர்வடையும். நீ தேவ ஊழியத்தில் குளிர்ந்தவனுய் அசமந்தமுள்ளவனுய்ப் போகலாம்.

---

## பலகோணங்களில் பாப்பரசர்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

**கார்த்திகை**

| | | | |
|---|---|---|---|
| 4 | ஞா. | இஸ். ஆகமனத்தின்பின் 21-ம் ஞாயிறு (வி. ம.) | [ப] |
| 5 | தி. | காலதினம் | [ப] |
| 6 | செ. | காலதினம் | [ப] |
| 7 | பு. | காலதினம் | [ப] |
| 8 | வி | காலதினம் (வேதசாட்சி முடிபெற்ற நால்வர்) | [ப] |
| 9 | வெ. | இரட்சகர் மகாலய அபிஷேகத் திருநாள் (வி. ம.) | [வெ] |
| 10 | சனி | அர்ச். அவெல்லீனி பெலவேந்திரா | [வெ] |


# சத்தியவேத பாதுகாவலன்

**1962-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 3-ந் திகதி**


# தலைமை தாங்கும் தகமை

கிறீஸ்து தமது திருச்சபையை நிறுவியபோது இராயப்பரை அதன் தலைவராக நியமித்தார். பன்னிரு சீடர்களிலும் அருளப்பரே அதிக சிறப்பைப் பெற்றிருந்தார். அவர் கிறிஸ்துவின் நண்பர். உறவினருமாவர். கடைசிவரை தமது எசமானரைப் பின்சென்றவர். இராயப்பரோ பகிரங்கமாக ஆண்டவரை அறியேனென மறுதலித்தவர். ஆயினும் தலைமை தாங்கும் தகமை அவரிடமிருந்ததென்பதை கிறிஸ்து அறிந்திருந்தார்.

1958-ம் ஆண்டு ஐப்பசிமாதத்திலோர் தினம். இராயப்பர் மகாலயச்சதுக்கத்தில் மக்கள் திரள் அலைமோதுகிறது. மேல்மாடியில் ஒரு கர்தினல் தோன்றுகிறார். "உங்களுக்கு ஒரு சுபசெய்தியைத் தெரிவிக்கிறோம். மீண்டும் நம்மிடையே பாப்பு உள்ளார். அவர்தான் கர்தினல் ரொங்கொல்லி ஆண்டவர்" எனத்தெரிவிக்கிறார். மக்கள் வெள்ளம் மகிழ்ச்சியால் ஆர்ப்பரிக்கிறது. பின்னர் யார் இந்த ரொங்கொல்லி என ஆச்சரியக்குறிகளை எழுப்புகிறது.

பாப்புவாகத் தெரியப்பட்டபோது அகில உலகத்தாலும் அதிகம் அறியப்படாதவர் இன்றைய திருச்சபைத் தலைவர். ஏழ்மை நிரம்பிய குடிசையில் அவதரித்தார். விவசாயியாக காற்றிலும், மழையிலும் கடும்பனியிலும் கஷ்டங்கள் அனுபவித்தார். கால்கடுக்க காலைமாலை கடுநடை நடந்து கல்விகற்றார். கால்வயிற்றுக் கஞ்சியின்றிப் பல நாள் பட்டினி கிடந்தார் அன்று.

ஐம்பதுகோடி மக்களின் ஆன்மீகத் தலைவர், வத்திக்கான்நாட்டு மன்னர். ரோமையின் மேற்றிராணியார், கிறிஸ்துவின் பிரதிநிதி, வழுவாவரம் பெற்ற வெண்கொற்றக் கொடியோன் என்ற சிறப்புகள் இன்று. இந்த இரு நிலைகட்கிடையே ஆடம்பரங்கள் தம்மை ஆட்கொள்ளாது, பதவிமோகம் பற்றிப்பிடிக்காது, பற்றற்றநிலையில் வாழ்ந்து வருகிறார் அருளப்ப தந்தை.

இவர் வேதசாஸ்திர விற்பன்னரல்லர். ஆயின் வேதபோதகங்களையும் தெளிவாக விளக்கவல்லவர். பெரிய அரசியல்தந்திரியல்ல. ஆயின் பிரபல அரசியல் வாதிகளாலும் மதிக்கப்படுபவர். சிறந்த எழுத்தாளரல்ல. ஆனால், அவரது நிருபங்கள் அகிலஉலகுக்கும் அருங்கொடையாக அமைந்து விடுகின்றன. சொல்லலங்கார பிரசங்கியல்ல. ஆயின் அன்பும் பண்பும் கலந்த அவரது மொழிகள் கேட்போரனைவரையும் அவர்பால் கவர்ச்சியுறச் செய்கின்றன.

ஏழ்மை நிரம்பிய பால்யவாழ்வு இன்றும் அவர் மனக்கண்ணில் பளிச்சிடுகிறது. இன்றைய அந்தஸ்து தமது பண்பை மாற்றிவிடக்கூடாதென்பதே அவர்கவலை. எல்லாக்குறைகளையும் கவனி. சிலவற்றையே திருத்து. இது அவர் சித்தாந்தம். அன்பால் எதிரியையும் ஆட்கொள். அவர் தாரகமந்திரம் இது. மற்றைய மதத்தோருக்கும் மதிப்புத் தருதல் அருளப்ப பாப்புவின் உயரிய பண்பாடு. யாவரையும் கிறிஸ்துவின் மந்தைக்குள் ஒன்று சேர்த்தல் அவரின் ஏகஇலட்சியம்.

பழைய சம்பிரதாயங்கள் பலவற்றைத் தகர்த்தார். கட்டுப்பாடுகளைத் தளர்த்தினார். நான்காண்டுகளில் நல்லன பலசெய்து தம்பெயரை உலகநிலையில் உயர்த்திவிட்டார். பொதுவுடமைவாதிகளும் போற்றுமளவுக்கு, பிறமதத்தவரும் மதிக்கும் நிலைக்கு இந்த எண்பத்தொரு வயதுக்கிழவர் சுறுசுறுப்பாக, திறமையாக, நன்னோக்குடன், முன்னேற்றப்பாதையில் திருச்சபையை நடாத்துகிறாரென்பது யாவரும் ஒப்புக்கொண்ட ஓர் உண்மை.

இன்று எங்கள் தந்தையின் தினம். இராயப்பர் சதுக்கத்தில் ஆயிரக்கணக்கானோர் ஒன்று கூடுவர். தாத்தாவே வாழ்க என ஆர்ப்பரிப்பர். நாமும் அவர்களுடன் சேர்ந்து வாழ்த்துவோம். அத்துடன் அந்த அன்புத் தந்தையின் பெரும்முயற்சியான பொதுச் சங்கமும் சித்தியுறப் பிரார்த்திப்போம்.

## பரிசுத்த பாப்பரசரின்

# அப்போஸ்தலிக்க ஆசீர்வாதம்



திருக்குடும்ப கன்னியாஸ்திரிமார் யாழ்ப்பாணப் பகுதியில் சென்ற ஒருநூற்றாண்டு காலமாகத் தேவனின் அன்பான ஊழியர்களாய் அயராது உழைத்து வந்ததை நமது பரிசுத்த தந்தையாராகிய 23-ம் அருளப்ப பாப்பரசர் அறிந்து பிதாவுக்குரிய தமது அன்போடு இக்கன்னியாஸ்திரிமார் ஒவ்வொருவருக்கும் இத்தருணத்தில் தமது நன்றியுள்ள சந்தோஷ வாழ்த்துக்களைக் கூறுகின்றார். மேலும், தேவன் முன்போல இவர்களது திருத்தொண்டுகளின்மேல் கருணைபொழிய அவரைப் பிரார்த்தித்து இக்கன்னியர்களுக்கும், நூற்றாண்டு நிறைவுவிழா முயற்சிகளில் பங்குபெறும் குருமார், துறவிகள், விசுவாசிகள் சகலருக்கும் தமது அப்போஸ்தலிக்க ஆசீர்வாதத்தை அன்புடன் அருளுகின்றார்.

+ **சிக்கொக்னனி,**
கருதினல் ஆண்டகை.

# திருக்குடும்பக் கன்னியரும் தேவ அழைத்தலும்

— செல்வி வயலெற் இம்மானுவேல் —

திருக்குடும்பக் கன்னியரது இலங்கை வருகையின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் நாம் அவர்கள் கடந்தநூற்றாண்டில் நம்நாட்டில் ஆற்றிவந்த அரியதொண்டுகளை நினைவுகூருவது அவசியம். முக்கியமாகக் கல்வித் துறையில் அவர்கள் ஆற்றிவந்த பணி யாவருமறிந்ததே. அவர்களது பராமரிப்பின்கீழ் வளர்க்கப்பட்ட சிறுவர் பின்பு கல்வியிலும், ஒழுக்கத்திலும், பக்தியிலும் சிறந்தோராய் வாழ்க்கையில் பல்வேறு துறைகளில் திருச்சபையின் அணிகலன்களாக விளங்குவதைக்காண்கிறோம். இவர்கள் யாவரிடத்தும் திருக்குடும்பக் கன்னியரின் நற்பணி பலனளித்துள்ளதெனினும் தமது ஆசிரியரின் அடிச்சுவட்டைப் பின்பற்றிவந்துள்ள குருமார், கன்னியாஸ்திரிமாரிடத்தில்தான் அது பூரணமாகப் பலனளித்துள்ளதெனலாம். மக்கள் யாவரும் தம்மாலியன்ற வழிகளிலே தேவனுக்குத் தொண்டாற்ற முடியுமெனினும், தேவஊழியத்துக்காகவே தம்மை முழுதும் அர்ப்பணித்த தொண்டர்களாலேயே விசுவாசம் பாவுகிறது; திருச்சபை முன்னேறுகிறது. திருத்தொண்டர்களைப் பயிற்றுவதில் திருக்குடும்பக் கன்னியர்சபை எத்தகைய பாகம் வகுத்திருக்கின்றது?

பாடசாலையைவிட்டு வெளியேறியதும் உத்தியோகத்தை நாடிப்போகாது திருத்தொண்டுக்குத் தம்மை அர்ப்பணிக்கும் உள்ளத்துறவு ஒருவருக்கு ஒரேநாளில் ஏற்படுவது அரிது. தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும் என்பதற்கேற்ப, பிறந்தநாட்தொட்டு ஏற்பட்ட அனுபவங்கள், கேட்ட நல்லுரைகள், பயின்ற பழக்கங்கள் ஆகியவைகளே ஒருவரது மனப்பான்மையை உருவாக்குகின்றன. திருக்குடும்பக் கன்னியரின்கீழ் கல்விபயிலும் மாணவ மாணவியர் வேதஅறிவிலும், அனுஷ்டானத்திலும், நல்லொழுக்கத்திலும், தன்னடக்கத்திலும் பயிற்றப்படுவதுடன், அதே சமயத்தில் வெளியுலக சோதனைகள் அவர்களை அண்டாது பாதுகாக்கப்படுகின்றனர். இதனால் அவர்களது பிஞ்சு உள்ளங்கள் தூய்மையும், பரிசுத்தமும் உள்ளனவாக ஆயிரங்காலத்துப் பயிர் வளரும் விளைநிலங்களாகப் பண்படுத்தப்பட்டு விளங்குகின்றன. கன்னியாஸ்திரிமார் தமது மாணவியருள் சந்நியாச வாழ்க்கைக்குத் தகுதியுடையவர்களாகக் காணப்படுவோருக்கு விசேஷ ஆலோசனைகூறி, தேவதொண்டின் மகிமையை உணர்த்துகின்றனர். தமது ஆசிரியைகளின் சேவையைக் கண்கூடாகக்கண்ட மாணவியர் பலர் அவர்களைப்போல் தாமும் ஆகவேண்டுமென்ற ஆர்வமிக்கவர்களாய், உலக இன்பங்களை மட்டுமல்ல பெற்றார், உற்றாரைத்தானும் தியாகம்செய்யும் உறுதியுடன் துறவறவாழ்வை மேற்கொள்ளுகின்றனர். இச்சிறுமியர்களை பிடுங்கி வளம்படுத்தப்பட்ட விளைநிலம்போல் தேவதொண்டில் பன்மடங்கு நற்பயன் கொடுப்பார்களென்பதில் ஐயமில்லை.

ஒரு நூற்றுண்டுக்குமுன் ஆறாக இருந்த கன்னியாஸ்திரிமார் தொகை இப்போது 650 ஆகப் பெருகியுள்ளதுடன், இலங்கையின் மூலைமுடுக்குகளிலெல்லாம், கத்தோலிக்கர் வாழும் இடங்களிலெல்லாம் மடங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இதைச் சாத்தியமாக்கியது ஐரோப்பிய கன்னியருடன் சுதேச கன்னியர்களும் முன்வந்து தொண்டாற்றியமையே. புதிய திருக்குடும்பக் கன்னியர்கள் பயிற்றப்படும் நவசந்நியாச மடங்கள் இலங்கையில் இரண்டிருக்கின்றன. வென்னப்புவையிலுள்ளது சிங்களத்திலும், பண்டத்தரிப்பிலுள்ளது தமிழிலும் இயங்கிவருகின்றது. இவ்விரு நிலையங்களிலும் பல்வேறுதரப்பட்ட கல்வி, திறமை உள்ள இளம்பெண்கள் திருப்பணியில் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். அதன்பின் ஒவ்வொருவரும் தத[illegible]மக்கிருக்கும் கல்வி, திறமை முத[illegible]வற்றுக்கேற்பப் பாடசாலைகளிலும், வைத்தியசாலைகளிலும், வயோதிபர் இல்லங்களிலும் நியமிக்கப்பட்டு, தமது சேவையை வேண்டினோருக்கெல்லாம் ஆற்றிவருவதுடன், தாம் மேற்கொண்டுள்ள எளிய, தூய பெரியோருக்கமைந்த

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது மேற்றிராணியாரின் வாழ்த்துச்செய்தி

290, வீயா அவுறேலியா,
ரோமாபுரி.
18-10-62.

அதிசங். தாயார் அவர்களே,
அன்பான எமது திருக்குடும்பசந்நியாச சகோதரிகளே,

பரலோகத்தில் இருக்கும் எமது பிதா ஏராளமான விசேஷ ஆசீர்வாதங்களை எம்மேல் பொழிந்து வரும் காலத்தில் நாம் இன்று சீவிக்கின்றோம். பொதுச்சங்கமானது சகலகத்தோலிக்கரின் சிந்தனைகள், செயல்கள் யாவற்றின் தன்மைகளையும் உயர்த்திவிட்டதுமல்லாமல், ஆன்மகருமங்களுக்கு உரிய உயரிடத்தையும் உலகுக்கு எடுத்துக்காட்டியிருக்கிறது.

இந்தப்பாக்கியமான காலத்திலே, திருக்குடும்ப கன்னியாஸ்திரிமார் யாழ்ப்பாணப்பகுதியில் செய்துவரும் அப்போஸ்தலத் தொண்டு நூற்றாண்டு நிறைவு அடைவதும் குறிப்பிடத்தக்கதே. தம்மை முழுதும் தேவனுக்கு அர்ப்பணம்செய்த கன்னியர்கள், இவ்வளவு நீடித்தகாலமாக இங்கு



செய்துவந்த அரும்பணியானது இவர்கள் ஆன்மகருமங்களுக்குக் கொடுக்கும் உன்னத இடத்தையும், இவர்கள் இவ்வுலகத்திலே தேவனுடன் ஒன்றித்திருக்கும் உயர் தன்மையையும் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. அரிய இக்கன்னியர்கள், வேதஅறிவிலும், உலக சாஸ்திர அறிவிலும் எங்கள் பிள்ளைகளைப் பயிற்றி வந்தனர் என்பதை யாவரும் அறிவர். ஆனால், இவற்றிலும் எவ்வளவோ மேலாகத் தேவனுடன்ஒன்றித்துவாழ்ந்து, திருச்சித்தத்துக்குப்பணிந்து, மனிதஇரட்சணியத்துக்காக அவர் தொடங்கிய வேலையைத் தொடர்ந்துசெய்ய, அவர்இட்ட சிலுவையைச் சுமந்து வந்திருக்கின்றனர். இவர்களின் சீவியத்தின் ஒவ்வொரு விநாடியும் தேவனது நேசத்தில் புத்துயிர்பெற்று வந்திருக்கின்றது. இவர்களது சீவியத்தைச் சாதாரண உலகபான்மையிலே கணி[illegible]துக்கொள்வது பிழையாகும். [illegible]தேவனது வேலையே இவர்கள் [illegible]வலை. எவருடன் தொடர்பு கொண்டாலும் ஆத்தும இரட்சணியமே இவர்களது குறிக்கோள். மேலும் இவர்களது நேசமும் தியாகமும் நிறைந்தசீவியமானது, கிறிஸ்துநாதரின் ஞானச் சரீரமாகிய திருச்சபையின் மறுபாகங்களிலுள்ள ஆத்துமாக்களை அர்ச்சிக்கப் பெரும் உதவி அளித்துவந்துள்ளது.

யேசுநாதருடன் ஒரு நிறைந்த நூற்றாண்டுகாலம் ஒன்றித்து வாழ்ந்தசீவியமும், தேவன் தொடக்கிவைத்த வேலையை முற்றுப் பெறச்செய்யும் தொண்டும் மனதுக்குச் சந்தோஷத்தை ஊட்டும் கருமங்களல்லவா? இந்தவேலைக்கு உங்களைத் தெரிந்தெடுத்துக் கொண்டதற்காகத் தேவனுக்கு உகந்தமுறையில் நன்றிகூறுவோமாக.

நாம் எல்லோரும், திருக்குடும்பக் கன்னியர் யாவரும் தேவனுடன் இருக்கவேண்டும் என்பதை மகிழ்ச்சிக்குரிய இந்நாட்களில் உங்கள் யாவருக்கும் நினைப்பூட்ட விரும்புகின்றோம். அரிய கொடைகளாகிய உங்கள் சந்நியாசசபையின் விதிகள் நீங்கள் தேவனின் திருச்சித்தத்தை அறிந்து உங்கள் அப்போஸ்தலத் தொண்டைச் சிறப்பாகச்செய்துவர வழிகாட்டுகின்றன. உங்கள் வேலையைத் தேவன் ஆசீர்வதித்திருக்கின்றார். உங்கள் சேவையின் பயனைக் கண்டு சம்மனசுகள் மோட்சத்தினின்று மகிழ்ச்சியுடன் உங்களை நோக்குகின்றனர்.

உங்கள் மேற்றிராணியாராகிய நாம், இச்சந்தர்ப்பத்தில் உங்களுடன் இருந்து மகிழமுடியாது, தூரதேசத்திலிருப்பது தேவனது திருச்சித்தமாயிற்று. எனினும், யாழ்ப்பாண மேற்றிராசனத்துக்குத் திருக்குடும்பக் கன்னியர் நீண்டகாலமாக அதன் பலமும், ஆறுதலுமாக விளங்கிவந்துள்ளனர் என்பதைக்கூறி, அதற்காக எமது நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். உங்கள் ஒவ்வொருவரையும் தேவன் உண்மையான அர்ச்சியசிஷ்டராக விளங்க வைக்க வேண்டுமென்பதே எமது பிரார்த்தனை.

இத்துடன் பரிசுத்தபிதா, உங்கள்யாவருக்கும்,திருக்குடும்பகன்னியர் ஸ்தாபனத்துக்கும் மனம் உவந்து அளிக்கும் விசேஷ ஆசீர்வாதத்தை அனுப்பிவைக்கிறோம். தேவனின் கிருபையானது உங்கள் பரிசுத்தவாழ்விலும் பிறரை அர்ச்சிக்கும் உங்கள் அரியதொண்டிலும் ஒருபுதிய திருப்பத்தை உண்டாக்குவதாக. உங்களது அயரா உழைப்பினால் நீங்கள் நிறுவி நடத்திவந்தனவும் இப்போது இழந்துபோயினவுமான நிலையங்களைப்பற்றி நினைத்துத் துக்கப்படாதீர்கள். நீங்கள் செய்த இத்தியாகங்கள் யாவற்றையும் உங்கள் நூற்றாண்டு நிறைவுவிழாப் பூசைப்பலியுடன் ஒன்றுசேர்த்துத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து ஒரு புதுச்சிலுவையையும் "போய்ப் போதியுங்கள்" என்ற ஒரு புதுப்பணியையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

உங்கள்செபத்தில் நம்மையும், உங்களை விசேஷ பங்காளிகளாய் அடக்கியுள்ள எமது மேற்றிராசனத்தையும் நினைவுகொள்வீர்களாக.

நமது ஆண்டவரும், மாசற்ற திருத்தாயாரும் உங்களைக் காப்பார்களாக.

கிறிஸ்துவிலும்,
மாசற்ற மரியாயிலும்
உங்களைநேசிக்கும்
+ ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O. M I.
யாழ்ப்பாண மேற்றிராணியார்.

# பேர்போ பதி தோன்றி!

— செல்வி ரோஜா சாமுவேல் —

## மலர்ந்தும் மலராத பாதி மலர்போல!

1862-ம் ஆண்டில் ஒருநாள். தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் இறைவனின் பாதசேவைக்கென அர்ப்பணித்துவிட்ட திருக்குடும்பக் கன்னியர் கைவண்ணத்தில் நீ மலர்ந்தும் மலராத பாதிமலராக யாழ்நகரில் அரும்பினாய். இன்று பூத்துக்குலுங்கும் புதுமலராக இலங்கையின் எட்டுத் திக்கிலும் உன்கிளைபரப்பி நறுமணம் வீசுகின்றாய். சத்தியவேதத்தின் பரம்புதலுக்குக் கடுகுவிதையை உவமித்தாரே யேசுபிரான். கடுகு விதைபோல் கண்ணிலும்படாது தோன்றிய நீ, இன்று ஆலகாலவிருட்சமாக எத்தனையோ ஆத்துமங்கள் வந்து தங்கி இளைப்பாறும் இன்பப் பூமியாக அமைந்துவிட்டாய். யாவற்றையும் துறந்து சேவைசெய்யவந்த கன்னியரும், யேசுவின் வாக்குக்கியைய இவ்வுலகத்திலேயே நூறுமடங்கு பலனை இந்நூற்றாண்டு விழாவில் கண்டுகளிக்கும் அதிர்ஷ்டர்தானென்னே!

## அருமைமகள் போல வளர்த்தவகை சொல்லவா!

எட்டாண்டுகளின் முன் "பெரிய மடம்" என்ற சிறப்புப்பெயரால் உன்னைப்பற்றிய கதைகளை என் அன்னை மூலம் பெருமையாகக்கேட்ட இளமைக்கால நினைவுகளுடன் எடுத்தடி வைத்தேன் உன் அகத்தினுள். நீட்டிய கரங்களுடனும், மலர்ந்த முகத்துடனும் வரவேற்றார் உன் எசமாட்டி. அந்நியளாகச்சென்ற என்னை உறவினளாகப் பாவித்து இருப்பிடம் காட்டினார். ஆசிரியத்தொழிலுக்கே புதியவளான எனக்கு அனுபவமொழிகள் கூறினார். வேண்டிய சௌகரியமெல்லாம் "வேண்டாம் வேண்டாம்" என ஈந்தார். அதுமட்டுமோ! அங்கிருந்த அத்தனை கன்னியர்களுமே என் நலம் விசாரிப்பர் அடிக்கடி. ஆசிரியத்தொழிலிலோ, உடல் நலத்திலோ, உற்றார் உறவினர் விஷயங்களிலோ அக்கறை காட்டி, அறிவுரைகள் ஈந்து ஆவன புரிந்துவருகின்றனர். எனக்குமட்டுமா இந்த அதிர்ஷ்டம்,இல்லையில்லை. திருக்குடும்பக் கன்னியரின் காவலில் வரும் அத்தனை ஆசிரியைகளும், கலாசாலை மாணவிகளும், பழைய மாணவிகளும். ஏன் கன்னிகா மடத்தில்வேலைபுரிவோர் கூட ஈன்ற பிள்ளைகளிலும் பெரிதாக அக்கறை காட்டப்படுகின்றனர். இவர்களின் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். !

# யாழின் நகர் கண்ட

## உன் தன்னலமற்ற சேவைநலம் சொல்லவா!

என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே! என உலகமுடிவுகாலத்தில் யேசுபிரானின் திருவாயினால் அழைக்கப்படப் பாத்திரமானவர்கள் உன் கன்னியர்என்றுகூறின் அதுமிகைப்படுத்தலன்று.கால்கைவழங்கா அங்கவீனர்கள் கணவனால் வஞ்சிக்கப்பட்ட அபலைகள், வயோதிபர் யாவரும் உன் நிழலில் ஆறுதலடைகின்றனர். இல்லிடம் அற்றோர், தாய்தந்தையற்ற அநாதைச் சிறுமிகள், எங்கும் தேடற்கரியதாயன்பைப்பெற்றுச் சொர்க்க லோகத்தில் வாழ்வதுபோல் மனமகிழ்கின்றனர். பசியென்று வந்தோர் வெறுவயிற்றுடன் திரும்பியதில்லை. நத்தார் புதுவருடம், மற்றும்விசேட தினங்களென்றால் அயலிலுள்ள ஏழைகளுக்குப் பரமஆனந்தம். ஏன் தெரியுமா? இலவசமாக உடைகளைத் தயாரித்து ஈந்து இவர்கள் முகமலர்ச்சியில் அகமலரும் தயாளகுணம்படைத்தோரல்லவா உன் கன்னியர். விசுவாசப்பரப்புதலுக்கோ, காசநோயாளர்சாலைகட்கோ, குருடர், செவிடர் விடுதிகளுக்கோ வேண்டிய பணத்தைத் தம்முடன் தொடர்பு கொண்டோரை ஊக்குவித்துச் சேகரித்து வருடந்தோறும் அனுப்பிவைக்கும் உன் கன்னியரின் இரக்கசிந்தையை என்னென்பது? அயலிலுள்ள பிரேதச்சடங்குகளில் அக்கறையாகப் பங்குபற்றி ஆன்மஇளைப்பாற்றிக்காக வேண்டுதல், ஆவனபுரிதல், கண்கலங்கும் உறவினருக்குக் கவலைபோக்குதல் முதலிய தொண்டுகளில் ஈடுபடும் பிறர்நலம்கருதும் கன்னியரை எம்மத்தியில் பெற நாம் பெற்றுள்ள பாக்கியமே பாக்கியம்.

# எழில் மன்றமே!

## கல்வி, ஒழுக்கநெறி கருத்துடனே ஊட்டும் கதை சொல்லவா!

காலை எட்டுமணி அடித்துவிட்டால் போதும் உன் அகத்தில் மழலைபேசும் சிறார் குவிந்துவிடுவர் மலர் வதனங்களுடன். "மினுங்கிய வதனம் சிணுங்கச் சிணுங்க, நத்தைபோல் ஊர்ந்து" என்ற பேச்சுக்கு இங்கே இடமில்லை. அன்புபொழியும் அன்னையர்களிடம் ஓடிவருவதற்கு அவர்கட்கு ஏது பயம். எங்கும் செபத்துக்கு, ஞானக்கல்விக்கு முதலிடம். எண், எழுத்து மற்றும் பல கலைகளை மட்டுமா கற்கின்றனர். இல்லையில்லை. நடனக்கலை, தையற்கலை, மனையியல், ஓவியம், கைவேலை போன்ற பல்துறைகளை ஸ்தாபித்து மாணவிகட்குப் பாடசாலையிலேயே ஆர்வமூட்டியிருக்கின்றனர். இன்பமான இசைக்கலையை மாணவிகட்கு ஊட்டுவதில்தான் எவ்வளவு அக்கறை. தேகப்பயிற்சி, அணிவகுப்பு மற்றும் நாடகவிழாக்கள் ஆசிரியைகட்குமுன் கன்னியர்களே முக்கியபங்காக முன்னணியில் நிற்பர். அதுமட்டுமல்ல, கசக்கும் மருந்தை சர்க்கரையினுள் பொதிந்து ஊட்டுவதுபோல மாணவிகளது குற்றங்குறைகளை அன்புடன் கண்டித்துத் திருத்தும் சிறந்தமுறையை என்னென்போம். வஞ்சகமற்ற நெஞ்சம் கொண்ட உன் கன்னியர் தம்மிடம் கற்கும் மாணவிகட்கும் அந்தச் சிறந்த மனப்பான்மையை ஊட்டுகின்றனர். இவ்விதம் அருஞ்சேவையாற்றும் கன்னியர் செல்லுமிடமெல்லாம் சீருற்றுவிளங்குக! எங்கிருந்தாலும் திருக்குடும்பக்கன்னியரும், அவர்கள் சேவையும் வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூலோக மோட்சப் புனிதவதிகள் வாழ்க்கையின்மாண்பு

உலகம் சதமல்ல; உற்றார், பெற்றோர், உடன்பிறந்தார் தாமும் சதமல்ல; உலகுளமற்றெதுவும் சதமல்ல; ஆண்டவன் தொண்டு ஒன்றே சதம் சதமெனும் துணிவுகொண்டு, துறவு பூண்டொழுகும் கன்னிமாதர் தம் புனித வாழ்க்கையின் மாண்பினைச் சிறிது கூறுமுகத்தான் ஈண்டு இக்கட்டுரை இம்மலர்க்கண் இடம்பெறலாயிற்றெண்க.

கடவுளர் தம் விசேஷகருணையினுல் ஆட்கொள்ளப்பட்டுத் தேவஅழைத்தலுக்குச் செவிசாய்த்து ஆண்டவன் தொண்டாற்றும் சீரிய வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள புனித மாதர்கள் வதியும் கன்னிகா மடங்களே ஈண்டுப் பூலோக மோட்சமென அழைக்கப்படுகின்றன. இம்மடாலயங்களிற்றான் புனிதர்களையும் அவர் தம் புனித வாழ்க்கையினையும் காண்டல்கூடும். புனித வாழ்க்கை காரணமாகச் சதா ஆனந்தம் நிலவிக் கற்பு, தரித்திரம், அமைச்சலெனும் ஒரு மூன்று பொற்புறு வாக்குத்தத்தங்கள்மூலம் மூவாசை முனிந்து அமைதி வாழ்க்கை வாழும் புனிதவதிகளைக் காணலாம்.

இருபத்து ஓரிரு ஆண்டுக்காலம் இக்கன்னிகாமடக் கல்லூரிகளில் கல்விபயிற்றும் வாய்ப்புப்பெற்ற யான்—எனது அநுபவத்திற் கண்டதும், கேட்டதுமாகிய அவையிற்றினிற் சிலவற்றினையாவது எடுத்துரைக்க விழைகின்றேன். பாலியப் பராயக் காலத்தே மெய்யங் கடவுளை வழிபட அறியாதும், சத்திய கத்தோலிக்க மதத்தினைத் தழுவிடத் தெரியாதும் தடுமாற்றுளம் படைத்திருந்த யான்—பின்னர் மேற்படி புனிதவதிகளதும் மற்றும் கத்தோலிக்க புனிதர்களதும் சீரியவாழ்க்கையினதும் வழிநடாத்தலினதும் விளைவாகச் சத்தியமறையினிற் புக்கு மெய்யங் கடவுளரை வழிபடும் சலாக்கியம் துய்ப்பேனுயினேன்.

பண்டு மூவாசை முனிந்து, துறவிகளாதல் கடினமாக இருந்ததில்லை. துறத்தலுக்கும் இன்றுபோல் அன்று — மண்ணும் பொன்னும், பவுள்சும் சொகுசும் ஆகிய வாழ்க்கைச் சுகபோகங்கள் மலிந்து பொலிந்து இருந்ததும் இல்லை. ஒருவாது ஞானக் கண்களைக் குருடுபடுத்தும் திரைப்படக் காட்சிகளும், இனிமைபயந்து இதயத் தூய்மையினை மாசுபடுத்தும் காதற் கீதங்களும், ஒழுக்கத்திற்கு இழுக்கை உண்டுபண்ணும நடின நாட்டியங்களும் இடம்பெற்றதும் இல்லை. இக்காலத்து, நவீன நாகரீக உடை, சடை, நடைத் தடல்புடல்களினிடையே—மூக்குறும்புகளாம் மூவாசை முனிந்து துறவிகளாகி அமைதி வாழ்க்கை வாழுதல் இலகுவில் இயலுவதாமொன்றே?

இவ்வாறிருப்பவும் — இவ்வுலக சுகபோகங்கள் யாவற்றினையும் துரும்பெனத்துணிந்து, உதறித்தள்ளி உலக சுகபோகங்கட்குப் பிரியாவிடைகூறி— ஆண்டவன் தொண்டு ஒன்றினையே மேலென மதித்து இன்று துறவற வாழ்க்கை நடாத்தும் கன்னிகாமாதர் தம் வாழ்க்கையின் மாண்பினை மேலும் விரித்துரைத்தல் வேண்டுவதாமோ? இளமைத் துடிப்பினுல் இறுமாந்து—உலகப்பற்றும், பெற்றோர், உற்றோர், உறவினர் பாசமும் பெருமிதம் கொள்ளும் யுவதிப் பராயந்தே துறவுபூண்டு சாங்கோபாங்கத்தில் வளர்ச்சியுற்று, அல்லும் பகலும் ஆண்டவன் திருவடி தொழுது, செபமும், தவமுமே தமது சீரிய அலுவலாகப் பூண்டொழுகும் இக்கன்னிகா மாதர்கள் காலாந்தரக் கல்விகேள்விகளிலும் குறைந்தவர்கள் அல்லர். சுயமொழிகளிலும் மற்றும் ஆங்கிலம் முதலாம் பிறமொழிகளிலும் பாண்டித்தியம் படைத்து பட்டாதாரிகளாக விளங்குகின்றார் பலர். நவீன கற்பித்தல் முறைகளிலும், மானத தத்துவவித்துவத்திலும் துறைபோகக் கற்றுணர்ந்தார் மேலும் பலர்.

குழந்தைகளைப் பராமரித்தலிலும், அவர்கட்கு வேண்டிய கல்விபயிற்றுதலிலும் இவர்கட்கு இணையானோர் மற்றெவரும் இல்லையெனபதற்கு—இவர்களால் நடாத்தப்படும் பாலபாடசாலைகளே சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகின்றன. ஆரம்பக்கல்வி மாத்திரமல்ல—உயர்தரக்கல்வி விற்பன்னங்களைப் பயிற்றுதலிலும் உச்சநிலையை அடைந்து விட்டார்கள். மகாவித்தியாலயங்களையும், மகளிர் கல்லூரிகளையும் எவரும் வியந்து புகழ்ந்துகொள்ளும்வகையில் உச்சிதமாக நடாத்தி வருகின்றார்கள். சாதி சமய பேதமில்லாது எவருக்கும் உலகியற்கலைகளோடு மதசம்பந்தமான கல்வியும், ஒழுக்கக்கல்வியும் ஒருங்குபயிற்றிவருகின்றார்கள்.

வியாதிஸ்தரைப் பராமரிப்பதிலும், வயோதிபரைக் கண்காணிப்பதிலும் தொற்றுநோயாளர்க்கும், குஷ்டரோகிகட்கும் தொண்டு செய்தலிலும் பற்பல சபைகளைச்சேர்ந்த கன்னிகா மாதர்கள் புரிந்துவரும் அளப்பரும் தற்பரித்தியாகசேவையினைப் பன்னுட்டுப் பிரதமர்களும், மற்றும்பெரியோர்களும் காலத்திற்குக்காலம் வியந்தும் புகழ்ந்தும் வருதலைப் புதினப்பத்திரங்கள்—சஞ்சிகைகள்மூலம் படித்துவருகின்றோம். இக்கன்னிகா மாதர்தம் ஒப்பற்ற பிறர்சிநேக சேவைகளைக் கண்ணாரக் கண்டு—வியப்புற்ற நமது நாட்டுச் சைவப்பெரியார் ஒருவர்கூறிய வார்த்தைகள் எனது ஞாபகத்திற்கு வருகின்றன.

"தமிழ் இலக்கிய, இதிகாச, புராணங்களிற் கூறப்படும் தேவமாதர்கள் தாமும்—கத்தோலிக்க கன்னிகாமாதர்களாகிய இவர்கட்கு இணையாகமாட்டார்கள். யான் எனது கண்களாற் கண்டுகளிக்கும் தேவமாதர்கள் இக்கன்னிகா மாதர்களே. இவர்களது தவஉடையும், சதா ஆனந்தம் நிலவும் வசீகரமனரம்மியம் மலர்ந்த வதனங்களும், வஞ்சகமறியா நெஞ்சமும், இனியமொழிகளும் வேறெவரிடத்தும் காண்டலும், கேட்டலும் அரிதாகும். இவ்வுலகிலேயே தேவமாதர்களைக் காணவிழைவோர் — இம்மடாலயங்களிலேதானே அவர்களைக் காணும் பாக்கியசாலிகள் ஆவர்" என்றனர் அப்பெரியார்.

ஆம், பெற்ற அன்னையினும் பன்மடங்கு அன்புடனும், ஆதரவுடனும், சிறுவர் சிறுமிகளை அரவணைத்துக் கல்வியறிவூட்டிக் கடவுளர் பக்தியிலும், நல்லொழுக்கத்திலும் வளர்க்கும் ஆற்றலும் ஆண்மையும் கைவரப் பெற்றோர் இவர்களே. தம்முடன் கல்விபயிற்றும் மற்றும் ஆசிரியர்கட்கெல்லாம் மேல்வரிச்சட்டமாக விளங்குபவர்களும் இவர்கள் தாமன்றே? "மீசாங்கள்" எனப்படும் பங்குவிசாரணைகள்தோறும் சமயத்தொண்டும், சமூகத்தொண்டும்புரிந்து பொதுமக்களை நல்வழிப்படுத்துவோர் இவர்களன்றி வேறுயார்? சுருங்கக்கூறின் இவர்களது துறவறஇல்லங்கள் பூலோக நந்தவனங்களாகவும் இக்கன்னிகா மாதாக்கள் ஆங்கு அலர்ந்து நறுமணங் கமழும் லீலிமலர்களாகவும் விளங்குகின்றார்களெனின் மிகையாகாது.

"மனத்தரித்திரமுடையோர் பாக்கியவான்கள்" எனவும், உனக்குள்ளன யாவற்றினையும் விட்டுத்துறந்து என்னைப் பின்செல்வாய்" எனவும் திருவுளம்பற்றினார் யேசுநாதசுவாமி. எங்கள் நல்ல ஆண்டவர் பிறந்த இல்லம் ஒரு மாட்டுத்தொழுவம்; அவரது ஆடை பழையகந்தை; அவரது மறை[illegible] வாழ்க்கையின் உறைவிடம் [illegible] சிறுகுடிசை; நெற்றிவியர்வை நிலத்திற்சிந்த நாளாந்தம்புரிந்த தச்சுத்தொழிலால் ஆயவருவாயே அவரது ஐசுவரியம்; ஈற்றுந்தம் அவர் சயனித்தசேக்கை—ஈனச்சிலுவைமரமேஎனின் தரித்திரத்தின் மகத்துவந்தான் என்னே! ஆம், எங்கள் கன்னிகா மாதர்களும் யேசுநாதசுவாமியைக் கண்டுபாவித்து மேற்படி தரித்திரத்தினையே தங்களை அலங்கரிக்கும் ஆடையாகக்கொண்டு வாழுகின்றார்களெனின் இவர்கள் தம் மாண்பின் மேம்பாடு எத்துணை உயரியது!

கற்பெனும் பொற்புறு புண்ணியமானது மக்கட்சமூகத்தை—மனித சுபாவத்திற்கு மேலாகஉயர்த்தி வானதூதர்க்கு இணையாக விளங்கச் செய்கிறது. நீரிற் குமிழியனைய நிலையற்ற இகலோக சுகபோகங்கள் யாவற்றினையும் துறந்தவராது அகத்தினை ஆண்டவனுடன் ஐக்கியப்படுத்தவல்லதும் கற்பெனும் புண்ணியமெனின் எங்கள் கன்னிகா மாதர்கள்— பூலோகமோட்சப் புனிதவதிகள் என்பதில் ஐயமும் உண்டோ?

"அமைச்சல் எனப்படும் புண்ணியக் கிரிகையினுல் ஒருவன் தனது சுயஇச்சைகளையும், எண்ணங்களையும் ஆண்டவனுக்குப் பலியிட்டுத் தேவசித்தத்துடன் தனது சுயசித்தத்தினை ஏகோபிக்கச் செய்கின்றான்" என்பதாக வேதவிற்பன்னர் ஒருவர் கூறுகின்றார். எங்கள் கன்னிகா மாதர்களும் துறவற வாழ்க்கையின் சாரமாக விளங்கும் அமைச்சலின் வாக்குத்தத்தத்தினை ஒப்புக்கொடுக்கின்றார்கள். இவர்களது பூரணஅமைச்சலே இவர்களது இல்லங்களை விளங்கவைக்கும் மின்விளக்குகள் ஆகின்றன. இவர்களது அமைச்சலை நடைமுறையிற் காணும் நாமும் தேவ கற்பனைகட்கும்—திருச்சபைக் கட்டளைகட்கும் அமைந்தொழுகப் பழகிக் கொள்ளுகின்றோம் அல்லவா?

ஈற்றில், நமது ஈழவளநாடெங்கணும் சிறப்பாக யாழ்ப்பாண மேற்றிராசனத் திருநாட்டின் பல்வேறுபாகங்களிலும் கன்னிகாமடங்களாகிய நந்தனவனங்களையும், ஆண்டுக்கன்னியர்களாகிய லீலிமலர்களையும் காண்கின்றோம். இற்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இப்பூஞ்சோலைகள், பல்லாயிரம் கல் தொலைவிருந்து நமது நாடுபோந்து சமயத்தொண்டும், கல்வித்தொண்டும் ஆற்றிவரும் ஐரோப்பிய கன்னிகா மாதர்களது தற்பரித்தியாகத்தின் விளைவுகளே என்பதனை நாம் மறவாது அவர்களது தொண்டினைப் பாராட்டி அவர்கட்கு நமது இதயபூர்வமான பெருநன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்.

அன்றியும், தற்கால வேதவிருத்திக்கும், கலாவிருத்திக்கும் சுதேசகன்னிகாமாதர்தம் தொகை போதியதல்லவெண்பது யாவரும் அறிந்ததே. எனவே, பூலோகமோட்சப் புனிதவதிகளாம் இவர்களது மகத்துவத்தினை அடையும் வாய்ப்பு நமக்குக் கிடையாதொழியினும், நாம் நமது அரும்பெறற் புதல்விகளுள் அதிசிறந்தவர்கள் எனக் காணும் அவர்களை இத்தேவ அழைத்தலாம் துறவறஅந்தஸ்திற்குப் பரித்தியாகம்செய்து மேற்படி மகத்துவத்திற் பங்குபற்ற முன்வருவோமாக.

வணக்கம்!

**ஆசிரியமணி பண்டித வி. அ. யோண்பிள்ளை**

## திருக்கன்னியர் பெருமை

போற்றுவம் வாரீர் கன்னியர் குலத்தை,
சாற்றுவம் கேளீர் அவர்சீரின் திறத்தை
இவர்போற் பிறரும் உலகில் உண்டோவென,
எவரும் வியப்பதன் காரணம் தேரீர்.
தன்னல மில்லாப் பிறர்க்குரி யாளர்;
'என்இனம்' என்னும் எண்ண மற்றார்.
'உன்னைப் போல் உன்பிறத் தியானை
நேசி' எனும்பணி தலைமிசை கொண்டார்.
விட்டனர் தமரை ஊரைப் பொருளை,
அடைந்தனர் பற்பல தேயத் தவரை.
ஊட்டினர் ஊக்கமாய் வேதபோ தத்தை,
காட்டினர் எவர்க்கும் தேவநேசத்தின் வழியை.
நாட்டினர் உலகில் பள்ளிச் சாலைகள்,
நிறுவினர் எங்கும்தம் மருத்துவ சேவையை.
நடத்தினர் அனுதையர், வயோதிபர் மடங்கள்,
செய்தனர் மேலும் பற்பல வேலைகள்.
சிறுவரின் தோழர் களாம் இக்கன்னியர்,
நோயாளரின் ஆறுத லாம்இம் மருத்துவர்.
வயோதிபர் அனுதையர் தாபரமாம்இக் கருணைகரர்,
திக்கற்றோரின் திசைகாட்டி களாம்இத் தேவதூதுவர்.
விரும்பாவேலைகள் விருப்புடன் செய்பவர் இவரே,
நடவாவழிகள் துணிவுடன் நடப்பவர் இவரே.
வேண்டாதவரை அன்புடன் ஏற்றுக்கொள்பவர் இவரே,
நெறிகெட் டோரைச் சீர்ப்படுத்துபவர் இவரே.
எனவே,
போற்றுவம் வாரீர், போற்றுவம் வாரீர்,
கன்னியர் குலத்தைப் போற்றுவம் வாரீர்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

மட்டக்களப்பு, தாண்டவன்வெளியிசாமைச்சேர்ந்த இருதயபுரத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருஇருதய நாதரிடம் "கேளுங்கள் கொடுக்கப்படும்" என்ற செபத்தின்மூலமாய் நாங்கள் கேட்டுக்கொண்ட உத்தியோக இடமாற்றம் நன்மையாய்க் கிடைத்தபடியால் நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறோம்.

ஜே. எஸ். குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வத்திக்கான் சமாச்சாரம்

## 200 ஆயர்கள் கலந்து கொண்டனர்

பொதுச்சங்கத்தில் கலந்து கொள்வதற்காக ரோமைக்கு வந்திருந்த பபலோ மேற்றிராணியாரான பேர்க் ஆண்டகை அண்மையில் காலமானார் அல்லவா? அவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக ஒப்புக்கொடுக்கப்பட்ட துக்கப் பாடற்பூசையில் 5 அமெரிக்க கர்தினால்கள் உட்பட 200 அமெரிக்க மேற்றிராணிமார் கலந்துகொண்டனர். ரோமையிலுள்ள அமெரிக்க தேவாலயமான சாந்தா குசன்னாவில் இவ்வைபவம் நடைபெற்றது.

## 368 ஆயர்கள் வரவில்லை

பொதுச்சங்கத்தில் கலந்து கொள்ளும் ஆயர்களின் தொகை 2540 என உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன. உலகமடங்கிலுமுள்ள மொத்த ஆயர்களின் தொகை 2908 ஆகும். இதில் 368 ஆயர்கள் பலவித முகாந்திரங்களாலும் சமுகமளிக்க முடியவில்லை என அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

## நோய் காரணமாக இருவர் திரும்புகின்றனர்

பொதுச்சங்க ஆரம்பவைபவங்களில் கலந்துகொண்டபின்னர் தங்கள் சுகத்தாழ்வு காரணமாக மேலும் ரோமையில் தங்கஇயலாத நிலையில் இரண்டு ஆயர்கள் விமானமூலம் தங்கள் நாடுகட்குத் திரும்பியிருக்கின்றனர்.

முதலில் அவ்விதம் திரும்பியவர் பங்களூரின் அதிமேற்றிராணியாரான தோமாஸ் போதகாமுரி ஆண்டவரவர்களாவர். இவருக்கு வயது 74.

அடுத்து வெளியேறியவர் 78 வயதான றிச்சாட் ஜேரு ஆண்டவரவர்கள். இவர் மிசிசிப்பியைச் சேர்ந்தவர். இடதுகாலில் ஏற்பட்ட வாதம் காரணமாக இரத்தோட்டநிலையில் தடை ஏற்பட்டுள்ளது. சிறிது குணமடைந்ததும் மருத்துவர்கள் அனுமதிப்பின் மீண்டும் ரோமைக்குச் செல்லப்போவதாக இவர் அண்மையில் தெரிவித்துள்ளார்,

## போலாந்திய பிதாப்பிதா விசேட குழு அங்கத்தவர்

பொதுவுடைமையால் பொதியப்பட்டுள்ள போலந்துதேசத்தின் பிதாப்பிதாவான கர்தினால் விஷின்ஸ்கி ஆண்டகைக்குப் பரிசுத்த பாப்பரசர் மீண்டும் ஒரு கௌரவத்தை வழங்கியுள்ளார். பொதுச்சங்கத்தின் விசேட குழுவொன்றின் அங்கத்தவராக அவரை நியமித்திருக்கிறார். பொதுச்சங்கத்தின்போது ஆயர்களால் எழுப்பப்படும் எப்பிரச்சனையாவது பொதுச்சங்க நிகழ்ச்சிக் குறிப்புகளில் அடங்கியிராவிடில் அவை இந்த விசேட இலாகாவுக்கு அனுப்பப்படும்.

இக்குழுவினர் இப்பிரச்சனைகளைப் பரிசிலனைசெய்து பின்னர் மசோதாரூபத்தில் பொதுச்சங்கத்தில் சமர்ப்பிப்பர். கடந்தவாரத்தில் பாப்பரசர் இந்த இலாகாவைச்சேர்ந்த அங்கத்தினர்க்கென ஒரு விசேட பேட்டியை அருளினார்.

பாப்பரசரின் இராச்சியபார மந்திரியாரான கர்தினால் சிக்கோணி ஆண்டகையவர்கள் இக்குழுவின் தலைவராவர். ஜெனோவாவின் அதிமேற்றிராணியார் கர்தினால் சிறி, மிலான்நகர் அதிமேற்றிராணியார் கர்தினால் மொன்ரினி, மியூனிச் நகர அதிமேற்றிராணியார் கர்தினால் டொப்னெர், சிக்காக்கோ அதிமேற்றிராணியார் கர்தினால் மெயர், புறுசெல்ஸ் கர்தினால் சுயனெஸ் ஆதியோர் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

## இத்தாலிய காவல்வீரர்கள் உதவுகின்றனர்

வத்திக்கான் பொலீஸ் இலாகா, தீயணைக்கும்படை, காவல்பகுதி ஆகியவற்றில் மேலதிகமாக ஆட்கள் எடுக்கப்பட்டிருக்கின்றனர் என வத்திக்கான் வானொலி தெரிவித்துள்ளது. பொதுச்சங்கத்தை முன்னிட்டு அதிக காவல் வீரர்கள்தேவைப்பட்டதால் முன்னர் வத்திக்கான் நகரப்பொலீஸ் இலாகாவில் கடமையாற்றி இளைப்பாறியோரும், முன்னைநாள் தீயணைக்கும் வீரர்களும் சேவைக்கு எடுக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் ரோமைநகரப் பொலீசார் 63 பேர் தினசரி 21 மணித்தியாலங்கட்கு இராயப்பர் சதுக்கத்தில் ரோந்துபுரிகின்றனர். இவர்களில் 50 சாதாரண வீரர்களும், 12 சார்ஜண்டுகளும் ஒரு அதிகாரியும் அடங்குவர். வத்திக்கான் எல்லையைச் சூழவர 150 இத்தாலிய இராணுவப் பொலீசார் இரவுபகலாகக் காவல் புரிகின்றனர்.

## எல்லா ஆயர்களும் வந்துசேர்வர்

பொதுவுடைமை நாடான போலந்துதேசத்தின் எல்லா மேற்றிராணிமார்களும் வத்திக்கான் பொதுச்சங்கத்துக்கு வந்து சேருவார்கள் என அத்தேசத்தின் பிதாப்பிதாவான கர்தினால் விஷின்ஸ்கி ஆண்டகை ரோமன் அவதானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார். வத்திக்கான் நகரிலிருந்து வெளியாகும் ரோமன் அவதானி, பாப்பரசரின் தினசரிப்பத்திரிகையாகும், கர்தினாலாண்டகையின் செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்து அத்தினசரிக பிரசுரித்துள்ளது.

போலாந்தில் 65 மேற்றிராணிமார்கள் உளர். இவர்களில் இதுவரை 17பேர் மட்டுமே இதுவரையில் ரோமைக்கு வந்துள்ளார்கள். மற்றையோர்களும் வந்து சேருவர் எனத் தாம் பரிபூரணமாக நம்புவதாகக் கர்தினால் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறுவதாவது:

மற்றைய பலநாடுகளிலுள்ளதைப்போல எங்கள் நாட்டில் கத்தோலிக்க மதத்துக்குச் சௌகரியங்கள் பல இல்லை. கத்தோலிக்க நிறுவனங்கள் எதுவும் எங்களிடமுல்லை. பாடசாலைகள் எங்களிடமிருந்து எப்போதோ பறிக்கப்பட்டுவிட்டன. எங்கள் கருத்துகளையும், அபிப்பிராயங்களையும், கத்தோலிக்க செய்திகளையும் வெளியிடுவதற்கு அச்சகங்களோ அல்லது, கத்தோலிக்க பத்திரிகைகளோ எங்களிடமில்லை. பொதுச்சங்க அலுவல்கள் எவ்விதம் நடைபெறுகின்றனஎன்பதைப் பொதுமக்களுக்குத் தெரிவிக்க மார்க்கமேதுமில்லை.

நேர்மையாகவும், மனஉருக்கத்தோடும் கடவுளைநோக்கிச் சங்கத்தின் சித்திக்காகப் பிரார்த்திப்பதொன்றையே எங்கள் கத்தோலிக்கர்கள் திருச்சபைக்கு உதவ முடியும்.

## அஞ்சல் தலைகளால் கௌரவப்படுத்துகிறது

தென் அமெரிக்காவைச்சேர்ந்த கொலம்பியா வத்திக்கான் சங்கத்தை நினைவுறுத்தும் தபால் தலைகளை வெளியிட்டு இப்பொதுச்சங்கத்துக்குக் கௌரவம் அளித்துள்ளது. இத்தபால்தலைகளில் ஒரு பக்கத்தில் பரிசுத்த தந்தையின் உருவமும், மறுபுறத்தில் மரியன்னையின் சித்திரமும் பொறிக்கப்பட்டுள்ளது.

## சங்கத்துக்குப் போகும்வழியில் காலமானார்

தமது இல்லத்திலிருந்து ரோமை நகருக்குப் பொதுச்சங்கத்துக்காக பஸ்வண்டியில் செல்லுகையில் ஒரு மேற்றிராணியார் காலமாகிவிட்டாரென வத்திக்கானிலிருந்துவந்த செய்திகள் தெரிவிக்கின்றன. இத்தாலியின் அலாற்றி மேற்றிராசனத்தின் ஆயர் இவர்.

பாச்சினி மேற்றிராணியார் மரிக்கும்போது அவருக்கு வயது 76, சென்ற மகாயுத்தத்தில் இராணுவத்தில் ஆற்றிய திறமைகட்காக இத்தாலிய அரசாங்கம் இவருக்கு விசேட பாராட்டுக்கள் வழங்கியிருந்தது. பஸ்வண்டியில் சென்று கொண்டிருந்தபோது சுகவீனமுற்ற ஆண்டகை சான் ஜியாக்கோமா மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். போகும்வழியில் அவர் காலமானார்.



வத்திக்கான் பொதுசங்க ஆரம்பநாளன்று மகாலய சதுக்கத்தில் நடந்தேறிய ஊர்வலத்தின்போது நம் மேற்றிராணியாண்டவரும் கலந்துகொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "செப்ரூ" ஞாயிறு அன்று நிகழ்ந்த அற்புதம்

புதியநூற்றாண்டின் வாயிலில்நின்று நோக்கும்நாம் காண்பது என்ன? திருக்குடும்பக் கன்னியர்மடம் இலங்கையின் பலபாகங்களிற் கிளை பரவி வளர்விருட்சமாய்நின்று நற்கனி கல்வி தமக்கல்வி, ஆன்மகோடிகளுக்குத் தனி நிழலாய்ப் பயனளித்து வருவதையே. நூறுவருடங்கள் ஓடிமறைந்துவிட்டன. இந்நீண்டகாலத்துள் ஈழத்தில் இக்கன்னியர் பெருங்கஷ்டங்கள்மத்தியிலும், தாங்கொணு ஆன்மசரீர இக்கணங்கள்மத்தியிலும் மனோதைரியம் படைத்தவர்களாய்த் தன்னலமறந்த சேவையாற்றி வருகின்றனர். அஞ்ஞான இருளைப்போக்கி மெய்ஞ்ஞான ஒளியை வளர்த்து வருகின்றனர். ஆங்கிலக்கல்வி, சுதேசக்கல்விஇவற்றை அடிப்படையாகக்கொண்ட உலகியலறிவைப் புகட்டி, இலங்கைவாழ் ஆண், பெண், பாலர் அநேகரைச் சன்மார்க்க பாதையில் வழிநடத்தி, கைதூக்கிச் சீர்ப்படுத்துகின்றனர். தியாகமே தம் வாழ்வின் குறிக்கோளாய்க் கொண்டு கல்வித்துறையிலும், சமூகச் சீர்திருத்தப்பணியிலும், மெய்ஞ்ஞான அபிவிருத்தித் தொழிலிலும் சிறந்தைமிக் கோராய்த் தம்மை முழுவதும் அர்ப்பணித்து வருகின்றனர்.

அந்நிய நாடு; கரிசீதோஷ்ண நிலை; பழக்கம்வராத புதியவாழ்க்கை முறை; தம் பூர்வீக மதக்கோட்பாடுகளிற் தோய்ந்த மனப்பான்மையுடைய மக்கள். எனினும், அன்பு மார்க்கம்கண்டு தெய்விகதாகலாற் பிணிப்புண்டு இக் கஷ்டங்களை ஒரு பொருட்டாக எண்ணாது அவ் ஆதிக்கன்னியர் தம்கடமையை இனிது நிறைவேற்றினர். அவர்கள்திறந்த அப்பாதையில், காலமூடாக நீண்ட அவ்வழியில் அவர்களைப் பின்தொடர்ந்த நூற்றுக்கணக்கானவர் தூயவாழ்க்கை நடத்தினர்; அற்புத செயல் ஆற்றினர். மேலைத்தேயப் பெண்மணிகள் மேற்கொண்டு இன்பகரமாய்ப் பணிசெய்த பாவனையை நம் நாட்டு வீரப்பெண்கள் வருடாவருடம் தம்மிடையே இருந்துவந்த பழக்க வழக்க எதிர்ப்புகளைத் தகர்த்தெறிந்து, தம்மவர் அனுமதிபெற்றும் பெறாதும் தெய்வப்பணியே உன்னதபணி, ஆன்ம ஈடேற்ற சேவையே ஒப்பற்ற சேவை யெனும் இலட்சியத்தைச் சிரமேற் கொண்டு தம்சமூதாயத்தின் பெண்திலகங்களாய் இலங்கையின் வடக்கிலும், தெற்கிலும் துரிதமாய்ஸ்தாபிக்கப்பட்ட மடங்களிற் சேர்ந்து தொண்டாற்றுகின்றனர்.

1820-ம்ஆண்டில் பிரான்ஸ்தேசத்தின் சிறுநகராம் போர்டோவில் வண. பியர் நொயல்லஸ் அவர்களின் தனி முயற்சியால் உண்டாக்கப்பெற்ற சிறிய ஸ்தாபனமானது 1862-ம்வருடம்வெற்றிகரமாய் ஸ்பெயின், இத்தாலி, இங்கிலாந்து, இலங்கை, கனடா, பிறேசில் ஆதியாம்நாடுகளிற் கிளைமடங்கள்பரவி வளர்ச்சியுற்றது. இலங்கையில் முதன் முதல் தோன்றிய மதசேவைக்கன்னியர் திருக்குடும்பக் கன்னியரே. அதுவும் யாழ்நகரே இவர்களது முதல் ஸ்தாபனத்திற்கு இடமாய் இருக்கப் பாக்கியம்பெற்றது. அந்நாட்தொட்டு இந்நாள்வரை இக்கன்னியர்களுக்கும், அவர்கள் ஆற்றிவந்த தொண்டுகளுக்கும் ஓர் தனிமதிப்பும்,சிறப்பும்இருந்து கொண்டே வந்தது. கத்தோலிக்கராலும், பிறமதத்தினராலும் பாராட்டிற்கு உரித்தாளராய் இருந்து செல்வாக்கு நிறையப்பெற்றவராய்மகிழ்ச்சியுடனும், வெற்றிகரமாயும் பணியாற்றினர்.

ஆரம்பகாலத்தில் பணக்கஷ்டம் முதலான நெருக்கடிகளின் மத்தியில் குழந்தை ஸ்தாபனம் கருணைநிறைந்த தேவனில் முழுநம்பிக்கைகொண்டு அக்கஷ்டங்களைச் சமாளிக்கக் கற்றுக்கொண்டது. ஸ்தாபகரான வண. பியர் நொயல்லஸ் சுவாமியவர்கள் தம் பத்தி வைராக்கியத்தின் துணைகொண்டு அவ் ஆதிக் கன்னியர்களுக்கு ஆதாரவும், ஒத்தாசையும்அளித்து, தம் ஸ்தாபனத்தைப்பேணி அபிவிருத்திசெய்யும் வழிகளை ஆராய்ந்தனர். இருவருடங்கள் கழிந்துவிட்டன. இன்னும் பிள்ளைப் பருவக்கஷ்டங்கள் இருக்கத்தான் செய்தது. அவ்வேளையில் யேசுநாதர் இக் கூட்டத்திற்குத் தம்விசேஷ அருளை ஏராளமாய் எடுத்துப்பொழியச் சித்தங் கொண்டார்.

அன்றொரு புனிததினம்; "செப்ரூஆஜெஸிமா" ஞாயிறு (அதாவது தபசுகாலத்திற்கு முன்வரும் மூன்றும் ஞாயிறு) ஸ்தாபகர், மடத்தில் திவ்வியநற்கருணை ஆசிர்வாதத்துக்குப் போகத் தருணம்வாய்க்காது தமக்குப் பதிலாக வண. டொலோ குருவானவரை அனுப்பியிருந்தார். அவர் பரிசுத்த நற்கருணையைக் கதிர்ப்பாத்திரத்தில் இட்டு உயர்த்திவைத்தார். அக்கணம் சிற்றாலயமெங்கும் ஒரு அற்புதஜோதி பரவியது. திவ்வியநற்கருணைக்குப் பதிலாக யேசுநாதர்தாமே உயர்வனப்புச் சோபைவீசும் வதனத்துடன் முப்பதுவயதுநிரம்பிய இளைஞனாய்ப் பாத்திரத்தின்வட்டம் ஓர்சட்டகமாய்அமைய அற்புததோற்றமளித்தார். அவர் தோளில் ஓர் கருஞ்சிகப்புப் பட்டி அணிந்து இடதுகைமார்பிலும் வலதுகை ஆசீர்நல்கும்பாவனையில் உயர்த்தி, இடம், வலம், நடு ஆகிய பக்கங்களிற் குறிப்பாய் சிறிது தலைஅசைத்து தன் அன்பின் அங்கீகாரம் ஈந்தனர். அவ்வேளை அவரது மட்டற்ற கருணைப் பிரகாசம் அச்சிறு ஆலயத்திலிருந்த கூட்டத்தினரைமேற்கொள்ள, இருபது நிமிடங்களாய்த் தனது தெய்வீக மானிட உருவம் பருப்பொருளாயும், அப்பத்தின்உருவம் மறைபொருளாயும் விளங்கிய அதிசயக்காட்சியளித்தார். ஆசீர்வாதம் கொடுக்கவந்த குருவானவர் இத்தோற்றம் தன் கண்மாயமோ என ஐயுற்று பரிசாரகச் சிறுவனை அழைத்து விசாரித்தார். அவன் தானும் அக்காட்சியைக் கண்டதாய்க் கூற, அவ்விஷயத்தை மடத்துத் தலைவிக்கு அறிவிக்குமாறு பணித்தார். பையன் கோயில் மேற்பார்வைக் கன்னிகைக்கு அதைக்கூற அவவும் காட்சியின் அதிசயத்தில் ஈடுபட்டிருந்த காரணத்தால் அதிபரிடம் செல்லாது உயிர்பெற்றுவிளங்கிய திவ்விய காட்சியை ஆராதிப்பதில் மூழ்கியிருந்தார். சிற்றாலயத்திலிருந்த அனைவரும் இக் காட்சியைக் கண்டிருந்தும ஒவ்வொருவரும் தம் கற்பனை உருவோ கண் மயக்கோஎனச் சந்தேகித்துக்கொண்டு தம் சுபாவத்திற்கு மேலான ஓர் அபூர்வ சக்தியால் பிணிக்கப்பட்டு தம்முணர்வு முற்றும் இழந்தோராய்த் தம்மைத்தாழ்த்தி, பக்தி வினயத்துடனும் மட்டுமீறிய அன்புருக்கத்துடனும் அவ்விருபது நிமிடங்களைச் செலவழித்தனர். மூன்றுகன்னியாஸ்திரிமார் மாத்திரம் தம் வழக்கம்போல் கண்களைத்திறவாது தியானத்தில் ஈடுபட்டிருந்தால் அக்காட்சியைக் காணவில்லை. எனினும் அம்மூவரும் வர்ணிக்கமுடியாத அற்புத உணர்ச்சி அவ்வேளையில் வாய்க்கப்பெற்று முன்னொருபோதும் அறியாத பக்திவசமாயினர். கோயிலிலிருந்த அநாதைச் சிறுவரும் கண்டு மகிழ்ந்தனர். அவர்களில் ஒருசிறுமி தான் முதல்நன்மை சிறப்பாய் வாங்க உதவிசெய்யும்வண்ணம் பிராத்தித்தாள். குருவானவர் பாத்திரத்தை உயர்த்தி ஆசிர்வாதம் நல்கியதும் காட்சி மறைந்தது. இயல்புக்கு மாறான இந்நிகழ்ச்சிக்கு அங்கு கூடியிருந்த ஒவ்வொருவரும் தம்கைச் சாத்திட்டு சான்று அளித்திருப்பதை ஆதிமடத்துச் சாசனங்களில் காணலாம்.

இவ்வுன்னத அநுக்கிரகம் பெற்ற லொறற்றோக் கன்னியர் தம் இடுக்கண்களைத் தேவநேசத்துடனும் ஆன்மநல உணர்ச்சியுடனும் அயராது உழைத்து மேற்கொள்ளவேண்டிய ஊக்கம் ஏராளமாய் அடைந்தனர். யேசுநாதர் தம்மோடு கூடவிருந்து பக்கத்துணையாய்த் தம்மை சகலகாரியங்களிலும் வழிநடத்தி மோட்சபாக்கிய உபசாரணை கிட்டும்வரை ஆதரவும் அநுக்கிரகமும் கொடுப்பாரென்ற நம்பிக்கை அவர்கள் மனதுள் தளைத்து ஓங்கியது. திவ்விய அப்பத்தின் வர்ணத்தில் தம் தெய்வீக மகிமைப்பிரலாபத்தை ஒளித்து வாழ்வதுபோல் திருக்குடும்பக்கன்னியரும் மறைந்தசீவியம் நடத்தி வரவேண்டுமென்று விரும்பினர் போலும். இவ்விசேஷ அற்புதக்காட்சியின்மூலம் இக்கூட்டக்கன்னியர் தனிமுறையில் கடவுளின் ஆசியைப் பெற்றனரென்பது வெள்ளிடைமலை. குழந்தையேசுவின் மாணபரியந்த அமைச்சல், தேவதாயின் ஈடற்ற கற்பு, சூசைமாமுனிவரின் புனித தரித்திரம் இவற்

— திருமதி மாகிறேற் சவிரிமுத்து —

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

## திருக்குடும்ப ....

( 6-ம் பக்கத் தொடர்ச்சி )

வாழ்க்கையால் இறைவனது திருநாமத்தையும் மகிமைப்படுத்துகின்றனர். யாழ்ப்பாணக் கன்னியர்மடத்தில் கல்வி பயின்ற எத்தனையோ மாணவிகள் இன்று தாம் கற்ற பாடசாலையிலேயே சிறப்புடன் பணிபுரியக் காண்கிறோம். திருக்குடும்பக்கூட்டத்தில் மட்டுமல்ல, திருச்சிலுவைக் கூட்டத்திலும், கார்மேல்சபையிலும் எமதுபழையமாணவிகள் பலர் கன்னியாஸ்திரிகளாயிருக்கின்றனர்.

மேலும் சிறுவயதில் இங்கு கற்ற மாணவர்பலர் இன்று குருத்துவ அந்தஸ்தில இருக்கக்காண்கிறோம். யாவற்றுக்கும் அடிப்படையாக அமைந்தது இவர்கள் பாலியத்திற்பெற்ற பயிற்சியாகும். அஃதின்றி இவர்களெல்லோரும் இத்தகைய வாழ்க்கையை மேற்கொண்டிருக்கமுடியுமா? மேற்கொண்டிருந்தாலும் அதில் வெற்றியும், இன்பமும் கண்டிருக்க முடியுமா?

இன்று நமநாடு தன் சுயதேவைகள் யாவற்றையும் பூர்த்திசெய்துகொள்ள வேண்டுமெனப் பலர்விரும்புகின்றனர். மற்றக்காரியங்களைப்போலவே திருத்தொண்டு செய்யத்தக்க ஊழியர்களைப் பெறுவதிலும் இலங்கைத் திருச்சபை தனது சுயதேவையைப்பூர்த்திசெய்ய வேண்டியிருக்கிறது. பிறநாட்டுக் குருமாரும், கன்னிகாஸ்திரிமாரும் இலங்கைக்கு வருவதற்கு அரசாங்கம் தடைவிதித்துள்ளதால் ஐரோப்பிய நாடுகளிடமிருந்து உதவியை எதிர்பார்த்திருப்பது வீண். ஆகவே, தன்கையே தனக்குதவியென, ஐரோப்பிய மிஷனரிமார் ஆரம்பித்த நற்பணியைத் தொடர்ந்துநடத்த, நம்மக்கள் முன்வரவேண்டும். கர்த்தர் தமது திராட்சைத் தோட்ட[illegible] பணிபுரிய ஏராளமான வேலை[illegible]களை எம்மத்தியிலிருந்து தெ[illegible] வேண்டுமெனப் பிரா[illegible]



## செப அப்போஸ்தல சபை

### கார்த்திகை

### பாப்பரசரது கருத்துக்கள்

**பொதுக்கருத்து**

பரிசுத்தபிதா இஸ்பிரீத்துசாந்து வானவரின் விசேஷ கிருபையினால் கூடியஞானம், தைரியத்துடன் சங்கத்தில் அக்கிராசனம் வகுக்கவேண்டிக்கொள்வது.

**மிஷன் கருத்து**

திருச்சபையின் சமுதாய போதனையும், சாதனையும் இன்னும் முன்னேற்றமடையா நாடுகள் அஞஸ்திகப் பொதுவுடைமையரது மாயைகளில் விழாது காப்பாற்ற மன்றாடிக்கொள்வது.

**காலைக்காணிக்கைச் செபம்**

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர்திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

## திருக்குடும்பக் கன்னியர் சேவை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சாங்கம் தடைசெய்ய முயல்வது போல் இவயர்களையும்தடைசெய்து விட்டால் நாட்டில் ஒழுக்கசீலர்கள் தோன்றாததுடன், நாடும் சீர்கேடுற்றவிதமாகமாறி நாசகரமான பாதையில், கட்டுப்பாடுகள் எதுவுமின்றி ஏறுநடைபோடும் என்பது இக்கன்னியர்சேவையினது உயர்ந்த தன்மையைக் கொண்டு இலகுவில் அறிந்துகொள்ளலாம்.

ஆகையால் நாடு இவர்களது சேவையின்றிப் பாதிக்கப்படாமல் காக்க, இவர்களது சேவை நிரந்தரமாகத் தேவையென்பது கண்கூடு. சேவா மனப்பான்மையோடு நூறு வருடமாக அல்லும் பகலும் அயராது உழைத்து, நாடு நலன்பெறத் தக்க வகையில் ஒழுக்க சீலர்களை, கல்விமான்களை, பேராசிரியரை உருவாக்கிய இக்கன்னியரின் சேவை [illegible]நீடிக்குமானால், மலர்ச்சியடைந்த, வளம்பெற்ற ஒரு சிறந்த நாடாக, மாற்ற உதவிபுரியும் என்பது உள்ளங்கை நெல்லிக் கனி.

### கத்தோலிக்க ஆசிரியர்களின்

## ஞானொடுக்கம்

யாழ்ப்பாண மேற்றிராசன கத்தோலிக்க ஆசிரியர்களின் ஞானொடுக்கம் கொலம்பகம், சஞ்சூசையப்பர் தாபனத்தில் 1-12-62 — 5-12-62 வரை நடைபெற இருக்கிறது. வண. சுவாமி இம்மனுவல் செல்வரூஜ் ஞானொடுக்கப் பிரசங்கம் செய்வார். நெருக்கடி மிகுந்த இக்காலத்தில் ஆசிரியர்களாகியநாம் எம் ஆத்துமத்தை வளம்படுத்தி, எம் கையில்இருக்கும் பாலர்களைப் பாதுகாத்து எம்பொறுப்பை நிறைவேற்றும் கடமைப்பாடுடையோராய் இருக்கின்றோம்.

இதில் பங்குபற்ற விரும்புபவர்கள் கீழ்க்காணும் விலாசதாருக்குக் கூடியவிரைவில் அறிவிக்கும்படி தயவாகக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

ஜே. றேமான்,
தலைவர், யா. க. ஆ. சங்கம்

ஆசிரியர், ரி. சின்னப்பு
கொலம்பகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கன்னியரும் அவர்கள் ஆற்றும் தொண்டுகளும்

கடவுளுக்குத் தம்மை முழுதும் அர்ப்பணித்து அவரிடம் ஆன்மாக்களை அழைத்துச் செல்லும் ஓர் உயரிய நோக்கத்துடன் சீவிப்பவர்களே துறவிகள். இத்துறவிகளும் தத்தம் தொண்டுகளுக்கேற்பப் பலசபையினராகப் பிரிக்கப்பட்டுள்ளனர். இவற்றுள் திருக்குடும்பக் கன்னியர்சபையும் ஒன்றாகும்.

இச்சபை பிரான்ஸ்தேசத்திலுள்ள போர்டோ நகரைச்சேர்ந்த பியேன்வேனு நோயேல்ஸ் என்னும் குருதந்தையால் 1820-ம்ஆண்டு வைகாசித்திங்கள் 27-ம்நாள் ஸ்தாபிக்கப்பட்டது. தமது சகோதரியும் வேறுஇரு பெண்மணிகளுமாக மூவரடங்கிய இப்புதிய சந்நியாசசபையைத் தொடக்கி அவர்களைத் திருக்குடும்பத்தின் பாதுகாப்பில் வைத்தனர். பின்னர் பாரியதோர் குடும்பத்தின் முதற்பிள்ளையாகிய ஒருஅனுதையும் சபையில் சேர்க்கப்பட்டார். தாய்மாரும், பிள்ளைகளுமாக அநேகர் இச்சபையில் சேரவே இஃது உண்மையான திருக்குடும்பமாயிற்று. ஆரம்பஆண்டுகளிற்றுனே இச்சபை நானுவிதகஷ்டங்களையும், சோதனைகளையும் அனுபவிக்க நேர்ந்தது. வறுமைப்பிணி வருத்தியது. தண்டனைகளும், வாதைகளும், குற்றச்சாட்டுகளும் காத்திராக் கோணங்களிலிருந்து வந்துகொண்டிருந்தன. தாபகரின் சகோதரியாகிய மதர் மேரி ரிறினிற்றிஎன்பவர் இச்சபையிருத்தல் கடவுளின் சித்தமாக இருந்தால் அதற்கோர் அறிகுறியைக் காட்டவேணுமென்று இறைவனிடம் இரந்துநின்றூர்.

1862-ம்ஆண்டு மாசித்திங்கள் மூன்றும்நாள் தால்மடத்தில் ஞாயிறுவாரத் திவ்வியநற்கருணை ஆசிர்வாதத்தின்போது திடீரென யேசுநாதசுவாமி கதிர்ப்பாத்திரத்தில் காட்சிதரலாயினர். இதுவே பியேன்வேனு நோயேல்சுவாமிகளின் பணிக்குத் தெய்வீகமுத்திரையென உறுதிப்படுத்தப்பட்டது. புதுமைநடந்த இந்நாள் இன்றுவரை திருக்குடும்பசபையினரால் ஓர் "செவ்வட்சர" நாளாகப் போற்றப்பட்டுவருகிறது.

யேசுநாதசுவாமியால் அன்பாக ஆசீர்வதிக்கப்பெற்ற மூவாண்டின் பின்னர் போர்டோநகர அதிமேற்றிராணியார் அவர்கள் திருக்குடும்பசபையின் ஏற்பாடுகளை அங்கீகரித்தனர். அத்தருணத்திலேயே சிறிய இனிய குழந்தையொன்றுநோயேல்ஸ்சுவாமியாரை "நல்லபிதா" என அழைத்தது. இன்றுவரை இக்குழந்தை விழித்தழைத்த மழலைப்பெயராலேயே இச்சபையின் தாபகர் அறியப்படுகின்றூர். இச்சபை மற்றும் சபைகள்போலாது பலகிளைச்சபைகளையுடையதாக விளங்குகின்றது. இச்சபைகள் வெவ்வேறு உடையணிந்து, வேறுவேறு பணிபுரிந்து, ஒரேபிரமாணங்கட்கமைந்து, "நல்லதாயார்" எனநாமம் பெற்ற ஒரேதலைவியின் கீழிருந்து திருக்குடும்பமெனப் பெயர்பூண்ட ஒரே சந்நியாசசபையாக நிலவுகின்றன.

i. அர்ச். சூசையப்பர் கிளைச்சபை: வறுமைப்பட்ட அனுதபிள்ளைகளைப் பராமரிப்பதும், கல்வி யூட்டுவதும் இச்சபையினரின் பிரதமவேலையாகும்.

ii. லொறெற்றோகன்னியர் கிளைச்சபை: பெண்கள் உயர்தரக் கல்விநிலையங்களின் விடுதிச்சாலைகட்கு இக்கிளைச்சபையினர் பொறுப்பாளிகளாகஇருக்கின்றூர்கள். இவர்களின்சபை ஸ்பெயின்தேசத்தில் விருத்திபெற்று வருகிறது.

iii. மாசில்லாமாதா கிளைச்சபை: இச்சபையினர் எவ்வித வித்தியாசாலைகளையும், எவ்வித பிள்ளைகளையும் பொறுப்பேற்று நடத்துகின்றனர். இவர்கள் வறுமைப்பட்ட மாதருக்கு ஞானேபதேசம் கற்பித்தும், நோயாளரை அவர்களது இல்லங்கட்குச் சென்று சந்தித்தும் வருகின்றனர்.

iv. நம்பிக்கையின் கன்னியர்: இவர்கள் நோயாளரை வீடுகளிலும், பாமரிப்புச்சாலைகளிலும் ஆதரிக்கின்றனர்.

v. அர்ச். மார்த்தாவின் கன்னியர்: இவர்கள் சாதாரண வீட்டுக்கடமைகளைப் புரிந்துவருகின்றனர்.

vi. மிஷனரிக் கன்னியர்: இவர்கள் தூரதேசங்களில் தேவஊழியம்செய்வதற்கு அனுப்பப்படுகின்றனர். சந்தர்ப்பத்துக்குத்தக எவ்விததொண்டினையும் செய்யத் தயாராக இருக்கின்றனர். தென்னுபிரிக்கா, பிறேசில், கனடா, இலங்கை ஆதிய இடங்களில் ஆயிரக்கணக்கானேர் ஊழியம் புரிகின்றனர்.

vii, ஏகாந்த கன்னியர்: இவர்களது சீவியத்தொழில் தியானத்தொண்டாகும். இச்சபைக் கன்னியர் தங்கள் தனிமைச்சீவியத்தில் ஏற்படும் கஷ்டங்கள், செய்யும் செபங்கள், தற்பரித்தியாகங்கள் யாவையும் ஏனைய ஆறுகிளைச்சபைகளிலுமுள்ள சகோதர கன்னியருக்காக ஒப்புக்கொடுக்கின்றனர்.

viii. தேவபுத்திரிகளின் சபை: இவர்கள் முற்கூறிய எச்சபையிற்சேர்ந்தவராயினும் எவ்விடத்திற்கேகவும், எவ்வித பணியைப்புரியவும் விரும்புகின்ற எக்கிளைச்சபையைச் சேரவும் "நல்லதாயா"ரிடம் தம்மை முற்றுக அர்ப்பணஞ்செய்யும் வாக்குத்தத்த உரிமையுள்ளவர்கள்.

"நல்லபிதா" 1861-ம்ஆண்டு மாசித்திங்கள் 8-ம்நாள் மரணத்திரையில் மறையலானுர். அக்காலத்தில் 224 மடங்களில் 2,000 கன்னியர்கள் இருந்தார்கள். இன்று திருக்குடும்ப சபைகளில் 300-க்குமேற்பட்ட மடங்களும் 5,000-க்கு மேற்பட்ட கன்னியர்களும் இருக்கின்றூர்கள்.

திருக்குடும்பசபை — இலங்கை: யாழ்ப்பாண மேற்றிராணியாராகவிருந்த மேன்மைதங்கிய சமேரியா ஆண்டவரவர்கள் 1862-ம் ஆண்டு கார்த்திகைத்திங்கள் தாயார் சேவியர் தலைமையின்கீழ் ஓர்கூட்டம் திருக்குடும்பகன்னியர்களை யாழ்ப்பாணத்திற்கு அழைத்துவந்தார்கள். இவர்களுடன் வேறுமூன்று இளங்கன்னியர்களும் சபையில் புதிதாகச் சேர்ந்தனர். ஓர் விடுதிப்பாடசாலையும், அனுதர்சாலையும் ஆரம்பிக்கப்பட்டன.

(தொடர்ச்சி அடுத்தபக்கம்)

— திருமதி தெரேசா மனுவேல்பிள்ளை —

## "செப்ரு ஞாயிறன்று ..."

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

றைப் பாவனையாகஏற்று நசரேத்தின் போக்கைத் தம் நாளாந்த வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் புணர்த்திகத்தோலிக்க துறவற வாழ்வின் முப்புரி வாக்குகளைச் சுமுத்திரையாய் நிறைவேற்ற அவர்கள் மனிதசுபாவம் மாத்திரம் போதியதன்று. நற்கருணை நாதரின் அற்புத அருளே அன்றுபோல் இன்றும் வழிநடத்தி இணையற்ற ஆற்றல் நல்கிவருகிறது. லொறற்றோவில் ஆசிகொடுத்து அங்கீகாரம் அளித்த யேசுநாதர் தற்போது தலைதூக்கி நிற்கும் பாரிய இன்னல்களைப் போக்கி வெற்றிஅளிப்பர். பல்லாண்டு வாழ்க திருக்குடும்பக் கூட்டம்.

## எனது ஆபிரிக்கயாத்திரை—15

# செங்கடலில் ஒரு சம்பாஷணை

— வண. பிரான்சிஸ் சிப்ளேஅடிகளார்

### 6 வைகாசி 1960

இரவுமுழுவதும் மிக உஷ்ணமாகக் காணப்பட்டது. அதிகாலை மூன்று மணிக்கு யான் விழித்தபோது எங்கள் நாவாயிலும் மிகப்பெரிதான மற்றொரு நாவாய் பக்கத்தில் பிரயாணம் செய்வதைக் கண்டேன், இன்று பகல்முழுவதும் மிக உஷ்ணமாகவே காணப்பட்டது. ஆயினும் சிறுதென்றல் அடிக்கடி வீசியமையால் தேகத்துக்குச் சிறிது சாந்திகிடைத்தது.

மத்தியானவேளையில் நாம் லண்டனிலிருந்து 4000 மைல்கள் தொலைவிலும் ஏடினிலிருந்து 979 மைல்கள் தொலைவிலும் சென்றுகொண்டிருக்கிறேமென அறிவிக்கப்பட்டது. மாலைநேரம் மனேகரமாகக் கழிந்தது. இன்றிரவு தெற்குக் குருசைக்கண்டேன். இதுவே முதலில் தெற்குக் குருசை யான்காண்பது. எனவேஇது பெரிய மகிழ்ச்சியையளித்தது. சந்திரன் வானத்தில் களங்கமறக் காட்சியளித்தான். நட்சத்திரங்கள் பிரகாசமாகத் துலங்கிக்கொண்டிருந்தன.

### 7 வைகாசி 1960

சீதோஷ்ணநிலையில் இன்று எவ்வித மாறுபாடுமில்லை. செங்கடலினூடாக நாம் பிரயாணம் தொடங்கியபோது குளிர்ந்தகாற்று வீசிக்கொண்டிருந்தது. பத்துவருடங்களாகக் கென்யாவில் கடமையாற்றியபின் தாயகம் சென்றுவிட்டு மீண்டும் கென்யாவிற்குப் பிரயாணம்செய்யும் ஒருவரைக் கப்பலில் சந்தித்தேன். எங்களிருவருக்குமிடையில் நிகழ்ந்த சம்பாஷணை மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

யான்: கென்யாவிலுள்ள ஐரோப்பியர் அத்தேசத்தின் எதிர்காலம் பற்றி யாது கருதுகிறூர்கள்.

நண்பன் அதையிட்டு நாங்கள் மிகுந்த கவலைகொள்கிறேம். 60-ம் ஆண்டின் முடிவில் ஆபிரிக்காவின் 24 கோடி மக்களில் 18 கோடிபேர் சுயஆட்சியில் திளைப்பார்கள்.

யான்: ஆபிரிக்காவிலுள்ள வெள்ளையரின் தொகை யாது?

நண்: கிட்டத்தட்ட 60 இலட்சம் வெள்ளையர்கள் வசிக்கின்றனர். இதந் வெள்ளையர்கள்தான் ஆபிரிக்கா இன்று இவ்வளவு முன்னேற்றமான நிலையை எய்தச்செய்தவர்கள் என்பது மறுக்கமுடியாத ஓர் உண்மை.

யான்: ஆபிரிக்காவில் பல புதிய தலைவர்கள் இன்று பிரசித்தமடைந்து வருகின்றூர்கள், ஒருபுதியசமூகத்தை ஆக்குவதற்கு இத்தலைவர்கள் பெரிதும் காரணமாகவிருப்பார்களா?

நண் : இக்கேள்விக்கு யான் நேரடியாகப் பதிலிறுக்கமுடியாது. பெல்ஜிய கொங்கோவின் தலைவர் பற்றிஸ் லூமும்பா முன்னர் தபாற்கந்தோர் லிகிதராகக் கடமையாற்றியவர். ஒருமுறை மரணதண்டனையும் பெற்றவர். இப்போது பெல்ஜிய அமைச்சர்கட்குச் சமமாகச் சுதந்திரம்பற்றிப் பேசுகிறூர். லூமும்பா நல்ல தலைவராயிருப்பினும் நாட்டை ஆட்சிசெய்வதற்குரிய திறமை[illegible]ற்றவர் என்பது எனது சொந்த [illegible]பிராயம்.

யான்: கென்ய[illegible]த்தின் ரொம்மபோயாபற்றி [illegible] கூறுகிறீர்?

நண்: தத்[illegible] கல்விச்சாலைகளில் தனது கல்வியைப்பெற்றுக் கொண்டவர் மபோயா. அக்கலாசாலைகளின் அதிபர்கள் கற்கும்போது மபோயாவில் எவ்வித திறமையோ அல்லது விவேகமோ காணப்படவில்லையென என்னிடம் கூறியிருக்கின்றனர். நெயிரோபியில் சுகாதார பரிசோதகராகக் கடமையாற்றியவர். இவருக்கு வெள்ளைக்காரர் என்றுலே பிடியாது. தான் பத்துப்பவுண் வேதனமாகப் பெற்றுக்கொண்ட அதே தொழிலைச்செய்யும் வெள்ளைக்காரருக்கு 50 பவுணும் அரசாங்க வாகன வசதிகளும் அளிக்கப்பட்டன என இவர்தமது சொற்பொழிவுகளில் கூறிவருகிறூர்.

யான்: ஜோமோ கென்யாட்டா பற்றி யாது சொல்கிறீர்?

நண்: கிக்கு ஜாதியினரின் தலைவர் அவர். புரட்சிவீரர். கென்யாவில் வளமான பகுதிகளில் வசிக்கும் வெள்ளைக்கார முதலாளிகளை எதிர்த்துவருகிறூர்.

யான்: வெள்ளைக்கார முதலாளிகள் இந்த வளமான பகுதிகளில் குடியிருப்பதற்குமுன் அவர்கள் பெருங்கஷ்டத்தின்மேல் இந்தக்காணிகளை வளமான பகுதிகளாக்குவதற்கு முன்னல் இவை பயனற்றவையென ஒதுக்கப்பட்டிருந்ததாகவும், கென்யமக்கள் அப்பகுதிகளில் வசிக்கவே விரும்பவில்லையெனவும் வாசித்திருக்கிறேன். உண்மைதானு?

நண்: ஆம், நீங்கள் கூறுவது முற்றிலும் உண்மை. ஆயின் 1929-ல் கூட கென்யாட்டா லண்டனில் இருந்தபோது இந்தவளமான பகுதிகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்.

யான்: அவர் ஒருபொதுவுடைமைவாதியா?

நண்: நிச்சயமாக அப்படித்தான் கருதுகிறேன். அவர் பகிரங்கமாகப் பொதுவுடைமைக்கட்சியில் அங்கம்வகிக்காதபோதிலும் அக்கட்சியின் மிகநெருங்கிய நண்பனுக விளங்குகிறூர். இந்த நெருங்கிய நட்பு பொதுவுடைமைவாதிகள் அவரை நன்கு உபயோகிப்பதற்கு வழிவகுத்துவிடும். பலவருடங்களாக அவர் மாஸ்கோவில் தங்கிப் புரட்சிகரமான எதிர்ப்புகள்பற்றி நன்கு கற்றறிந்திருக்கிறூர்.

யான்: ஆபிரிக்காவைவிட்டுப் பல ஐரோப்பிய குடியேற்றக்காரர்கள் நீங்கித் தங்கள் தாய்நாடு செல்கிறூர்களெனக் கேள்விப்பட்டேன். உண்மைதானு?

நண்: உண்மையாகவிருக்கலாம். சமீபத்தில் 600 பெரிய தோட்டங்கள் விற்பனைக்கு வந்திருப்பதாக அறிந்தேன். ஆயின் இந்தப்பெரிய தோட்டங்களை வாங்குபவர்கள் யார்? சிலவேளை மபோயா இத்தோட்டங்களைப்பெற்று துண்டுகளாக்கி, காணியில்லாதோருக்குக் கடன்முறையில் அளிக்கக்கூடும். இத்திட்டம் எழுத்தளவில் அலங்காரமாயிருப்பினும் கென்யாவில் நடைமுறையளவில் அந்நாட்டின் பொருளாதாரத்துக்குப் பெரும் பங்கம் விளைக்கும் என்பது எனது கருத்து.

யான்: மபோயா பிரிட்டிஷ் காமன்வெல்த்தின் ஒருபகுதியாகவே கென்யா இருக்க விரும்புகிறூரோ?

நண்: அவ்விதமே கூறிக்கொள்கிறூர். ஆயின் எதிர்காலம்பற்றி யாதறிவார்?

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னியரின்கல்விப்பணி

❁ பழைய மாணவி ❁

தாயானவள் பிள்ளையைப்பெற்றுப் பாலூட்டித் தாலாட்டி வளர்க்கின்றாள். அவனது அறிவுவிருத்திக்கும் ஞானவளர்ச்சிக்குமான விதைகளை ஊன்றுகின்றாள். யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள கத்தோலிக்க சிறார் மனதில் ஊன்றப்பெற்ற இவ்விதை இற்றைக்கு ஓர் நூற்றாண்டின்முன் பிரான்சுதேசத்திலிருந்து இங்குவந்த தாய்மார்களாலும் அவர்களைத் தொடர்ந்துவந்த ஐரோப்பிய, சுதேச திருக்குடும்பக்கன்னியர்களாலும் வளர்க்கப்பட்டு வந்துள்ளது. இவ்வளர்ச்சிக்கு அன்பெனும் நீர் வார்க்கப்பட்டு, தியாகம்எனும் உரம் இடப்பட்டது. இதன்பயனாக குடாநாட்டிலும் ஏன் இலங்கை முழுவதிலுமே தம் தீங்கனிகளாய் ஆயிரக்கணக்கான ஆண் பெண் மக்கள் உருவாகியுள்ளனர்.


1862-ல் மூன்றும் குறுக்குத் தெருவில் விரல்களில் எண்ணக்கூடிய தொகையான மாணவர்களுடன் தொண்டாற்றத் தொடங்கினர் இக்கன்னியர்கள். இப்பொழுது குடாநாட்டிலும், இலங்கையின் வெவ்வேறு பகுதிகளிலும் இலட்சக்கணக்கானமாணவர்கள் கொண்ட பல பாடசாலைகளில் பணி புரிகின்றனர். சீரிய போதனாமுறையுடன் சிறந்தஒழுக்க சமூகக்கல்வி ஊட்டுகின்றனர். ஆரம்பத்தில் விசாரணைப்பங்கின் உதவியோடு மாத்திரம் தம் அபிலாசைகளை வெறுத்து மனதை ஒறுத்து, உடலை வருத்திப் பணிபுரிந்தனர். "தம்மென்பும் பிறர்க்குரிய"ராகி இன்று யாழ்நகர் சேமக்காலையில் ஓய்வுகொண்டுள்ளனர். இவர்களைப்போன்ற ஐரோப்பிய கன்னியர் பலரின் சுயநலமற்ற பரித்தியாக வாழ்க்கையே என்னையும் அவர்களுடன் ஓர் உடனுசிரியையாகச் செய்தது எனின் மிகையாகாது.

ஏறத்தாழ 42 வருடங்களாக மாணவியாகவும், ஆசிரியையாகவும் இக்கன்னியர்களுடன் தொடர்புகொண்டுள்ளேன். இவ் ஸ்தாபனத்தில் இக்கால எல்லையுட் தொண்டாற்றிய சில சிரேஷ்டர்களைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

**சங்கைக்குரிய விசிற்றேசன் தாயாரும், கிளெயர் தாயாரும்:** 1924-ம் ஆண்டு 18வயது நிரம்பாத இளம்கன்னியர்களுள் ஒருவராகிய இலங்கைக்கு வந்த சங்கைக்குரிய கிளெயர்தாயார் அவர்கள் யாழ்ப்பாணத்து ஆங்கிலபாடசாலையில் உயர்தரவகுப்புகளில்கணிதவகை, தாவரசாஸ்திரம் என்பவற்றில் விசேட திறமையுடன் உழைத்து, இன்று இம்மடத்தின் அதிபராகத் திகழ்கின்றார்கள். தனித்தியங்குவதில் உள்ள கஷ்டங்களை மேற்கொண்டு திறமையுடன் பாடசாலையைப் பரிபாலித்து வருகிறார்கள். இவர்களுடன்வந்த இன்னொருவராகிய சங். விசிற்றேசன் தாயாரவர்கள் 1933-ம் ஆண்டுவரை கொழும்பில் ஆரம்பகல்வி, சமூகசேவை என்பவற்றில் ஈடுபட்டு, பின்னர் யாழ்ப்பாணம் வந்தார்கள். இங்கேயும் ஆரம்பபாடசாலை அதிபராயும், மொன்றிசோறி முறைகளில் விசேட பயிற்சிபெற்றவராயும்விளங்கினார்கள். எக்கஷ்டங்களிலும் கலங்காஉளம் படைத்தவர். தமக்கே இயல்பாயுள்ள புன்முறுவலாலும், தாய்க்குரிய அன்பாலும் எவரையும் அரவணைக்கும் தன்மையுடையோர். கையிடும் கருமங்களைக் குறைவற நிறைவேற்றும் ஆற்றல் மிக்கவர். இவரது சீரியபண்புகளினாலும், ஆற்றல் திறமையினாலுமே சங். கிளேயர்தாயார்அவர்கள் அன்று மடத்தின் அதிபராயும் இன்று மாகாணத் தலைவியாயும் விளங்குகின்றார்கள்.

**சங்கைக்குரிய பிறக்ஸீட் கிளெமன்ற் தாயார் அவர்கள்:** நானறிந்த பொழுது ஓய்வு பெற்றிருந்தனர். எனினும் மடத்திலிருந்த அனாதை விடுதிச்சாலையிலுள்ள நூற்றுக்கணக்கான பிள்ளைகளைத் தம் சொந்த மக்கள் போலவே பராமரித்து வந்தனர். தமிழறிவு வாய்க்கப்பெற்றவர்களாய் இருந்தபடியால் தம் கீழுள்ளவர்களையும் வெளியில் இருந்து அவர்கள் புத்திபோதனைகளைக் கேட்க வருபவர்களையும் நேரடியாக விசாரித்து அவர் குறைநிறைகளை நிவிர்த்தி செய்யக் கூடியவர்களாய் இருந்தார்கள். தம் நீண்டகால அனுபவத்தினால் தமக்குப் பின்வந்த முதலாளிமார்களுக்குப் பெரும் உதவியாய் இருந்தனர். மேலும், தங்கள் தள்ளாப் பராயத்தைச் செப தபங்களில் செலவழித்துப் பல நன்மைகள் செய்து வந்தனர். பழுத்த பழங்களாய்ப் பரமபதமடைந்தனர். விக்ரறீன் தாயார் ஆங்கிலப் பள்ளிக்கூடத்தில் அதிகவனஞ் செலுத்திக் கூடுதலான ஐரோப்பிய கன்னியர்களை வரவழைப்பித்தார். உயர்தர வகுப்புகளில் "பிரெஞ்ச்" பாட ஆசிரியையாகவும் இருந்தார். பிள்ளைக

## பூதவுடம்பு நீத்து புகழுடம்பு நிறுவிய கன்னியர் திலகங்கள்



சமாதானத்தில் இளைப்பாறுவார்களாக.

ளின் ஞாயிற்றுக்கிழமை ஞானோபதேச வகுப்புகளைத் தாமே கண்காணித்து வந்தார். மேலும் பெண்களின் உடைகளைப்பற்றி வெகு சிரத்தையுடையவர்களாய் இருந்தார். சந்தர்ப்பங்கிடைக்கும் போதெல்லாம் பிள்ளைகளை அழைத்துக் கற்பைப்பற்றியும் அடக்கவொடுக்கத்தைப்பற்றியும்பேசி வந்தார். 1930-ம் ஆண்டு மார்கழி மாதம் குருநாகலுக்கு மாற்றலாகி, அங்கு சேவைசெய்து இளைப்பாறி முதிர்ந்த வயதில் இறைவனடி சேர்ந்தார்.

**செபஸ்தியன் தாயார்:** இவர் யாழ்ப்பாணத்திற்குக் கப்பல் மூலமாய் வந்து கல்வித்துறையில் ஈடுபட்டுப் பல கஷ்டங்கள் மத்தியில் பல வருஷங்களாய் உழைத்தபின் கொழும்பிற்குச் சென்று பம்பலப்பிட்டியாவில் தற்போது திகழும் பாரிய கட்டிடங்களுக்கு அடியிட்டுப் பெரும் புகழ் ஈட்டினார். அன்பும், ஆற்றலும், அறிவும் ஒருங்கே அமையப்பெற்ற இவர் 1931-ம் ஆண்டு யாழ்ப்பாண மடத்திற்கு அதிபராய்வந்து கல்விக்குஎல்லா வசதிகளையும் செய்தார். இறுதியில் எம்மத்தியில் காலமானார்.

**லயோலாத் தாயார்:** இவர் பலவருடங்களாய் யாழ்நகர் ஆங்கிலமடத்தின் தலைமைஆசிரியராய் இருந்து இலங்கையின் தென்பகுதிகளில் அதிபராய் இருந்து இங்கே 1940-ம் ஆண்டில் அதிபராய்வந்து கல்வித்துறையில் பெண்கள் முன்னேறுவதற்குப் பெரும்பணி செய்தார். இவரது பழைய மாணவர் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் இருக்கிறார்கள். இவர் அதிகம் பேசமாட்டார். ஆனால் செயலளவில் பல சிக்கலான விஷயங்களையும் இலகுவாய்த் தீர்த்துவைப்பார். ஆன்ம இரட்சணியவேலையே இவர் விரும்பியது. திருமுகத்தில் விசேஷ பக்தியுடையவர். 1946-ம் ஆண்டு திரும்பவும் கழுத்துறைமடத்தின் அதிபராய்ச்சென்று பின் தம் ஓய்வுநாட்களை யாழ்ப்பாணத்தில் செலவழித்து இங்கேயே மரிக்கவிரும்பினார். ஆனால் "விசா" வரியினால் தன்னால் ஸ்தாபனத்திற்குச் செலவு ஏற்படக்கூடாதென்று தாம் இங்கே மரிக்கவேண்டுமென்ற ஆசையை விட்டுத் தள்ளா[illegible]திில் தம் தாய் நாடு சென்றுவிட[illegible] அண்மையில் வந்த செய்திக[illegible] அவர் சந்தோஷமாய் இருக்கிறா[illegible]

# வியத்தகு சேவைத்திறன்

— செல்வி தேவஜனி பாலசுப்பிரமணியம் —

இலங்கையில் மட்டுமல்ல அகில உலகிலும் எங்கெங்கே கன்னியாஸ்திரி மடங்கள் உள்ளனவோ அங்கெல்லாம் பெரும்தொகையான கன்னியாஸ்திரிகள் கடமைபுரிகின்றார்கள். தம் சமயத்தை அழியாது காப்பதைத் தமது நோக்கமாகக் கொண்டவர்களே இக் கன்னியாஸ்திரிமார்கள். சமயத்துடன் மட்டும் தம் சேவைகள் நின்றுவிட மாட்டாது; சமூகத்துறையில் அதாவது ஏழைகளுக்கு உதவிசெய்தல் இவர்களின் சேவைகளில் முக்கியபங்கெடுக்கின்றது.

கன்னியாஸ்திரிகள் மடங்களில் மட்டும் இருந்தார்களா? அப்படியில்லை. பாடசாலைகளைக் கட்டுவித்து அவற்றிலே போதகர்களாக அமர்ந்து, முக்கியமாக இலங்கையின் கல்விவளர்ச்சிக்குப் பேருதவி புரிந்தார்கள் என்பதை எவரும் மறுக்கமுடியாது. கன்னியாஸ்திரிகளின் பாடசாலைகள் இல்லாவிட்டால் இலங்கையின் கல்வித்தரம் கீழ்நிலையையே யடைந்திருக்கும். கல்வித்தராதரம் கீழ்நிலையை யடையாது காப்பாற்றிவைத்த பெருமை கன்னியாஸ்திரிகளையே சாரும் என்பது மறுக்கமுடியாத உண்மை.

கன்னியாஸ்திரிகள் மாணவ மாணவிகளுக்குக் கல்வி கற்பிப்பதில் மட்டும் தமது கடமைமுடிந்ததாகக் கருதவில்லை. கல்வியுடன் இன்னும் ஒரு ஒழுக்கத்தைப் புகுத்திவிட்டார்கள். அதுவே அறிவொழுக்கமாகும். கன்னியாஸ்திரிகளின் மிஷன் பாடசாலைகளே மாணவரின் அறிவொழுக்கங்களை வளர்த்த பெருமையையும் பெறுகின்றார்கள்.

கன்னியாஸ்திரிகள் எத்தனையோ அனாதைகளுக்கு தம்மடங்களில் இல்லிடம்கொடுத்து, அவர்களுக்குக் கல்வி பெறும் வசதிகளைச்செய்து, நற்சேவை ஈட்டியுள்ளதை நாம் நம்கண்ணாரக் காண்கின்றோம். எனவே பிறப்பு, வீடு என்னும் இரண்டினது துன்பஇன்பக் கூறுபாடுகளை ஆராய்ந்து அறிந்து அப் பிறப்பைப் பாவம்செய்யாது நீத்து மோட்சத்தை அடைவதற்குத் துறவறத்தை மேற்கொண்ட கன்னியாஸ்திரிகளின் பெருமை உலகின்கண் உயர்ந்ததாகக் கருதப்படுகின்றது. இதையே வள்ளுவரும்:

"இருமை வகைதெரிந்து ஈண்டு அறம்
பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு"

என்று மிகஅழகாகக் கூறுகின்றார்.

இலங்கையிலேயுள்ள சந்நியாசமடங்களில் சுதேசிகள்மட்டுமல்ல வெளியூர் தாய்மார்களும்அங்கம்வகிக்கின்றார்கள். அவர்களே சந்நியாசமடங்களைக் கொண்டுநடாத்தும் ஆதிகர்த்தாக்களாக உள்ளனர். தமதுஉற்றார், உறவினர்களைத் துறந்து, நாட்டைத்துறந்து, சமயத்தைமேற்கொண்டு, கடல்கடந்து வந்த அக்கன்னியாஸ்திரிகளின் (தாய்மார்) சேவைதான் என்னே!

# எமதுபாடசாலை

எமது பாடசாலையின் நூற்றாண்டு விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. எமது பாடசாலையின் இந்நன்னாளைக் கொண்டாடும் நாம்எமதுபாடசாலையைப்பல இன்னல்கள்மத்தியில் வெற்றிகரமாகக் கொண்டு செலுத்திய மாலுமிகள் யாரென நோக்குவோமாயின் அது எமது திருக்குடும்பக் கன்னியரையே சாரும்என்பது வெள்ளிடைமலை.

எமது பாடசாலையெனக் கூறும் பொழுது மனதில் புளகாங்கிதமடைந்து இன்பப் பரவசத்தால் உந்தப்பட்டு சந்தோஷக்கடலுள் அமிழ்ந்துப்போகிறோம். எமது பாடசாலை யாழ்ப்பாணத்தின் மத்தியிலே கம்பீரமாகக் காட்சியளிக்கும் அழகுக்கு ஈடு இணையேது.

எவ்வளவோ கஷ்டத்தின் நடுவேயும் மக்களுக்கு வழிகாட்டும் ஒளித்தம்பங்களாய் முன்நடந்து உதவிபுரியும் அவர்கள் தியாகத்தை எடுத்துரைத்தல் கணக்கில் அடங்கா.

ஏழைகள், பணக்காரர், சிறியோர், பெரியோர், படித்தவர், பாமரர்எனப் பேதமின்றி எல்லோருக்கும் கர்த்தரின் நல்வழியைக் காட்டுவதே இவர்கள் தலையாய கடமைகளில் ஒன்றாய் இருக்கின்றது. உலக சுகபோகத்தை வேரோடு கிள்ளிஎறிந்து தாரணிமாந்தர் நல்வாழ்வுக்காகவே அவர்கள் புரியும் தொண்டு எத்தனை.

இக்கன்னியர்களின் பேச்சிலே, நினைவிலே, எழுத்திலே, செயலிலே அன்புச்சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றது. கஷ்டத்தின் நடுவேயும் மக்கள் நல்வாழ்வை விரும்பிப்பாரில், தொண்டாற்றும் இவர்கள் பரிவு உணர்ச்சியின் மாட்சிமைதான் என்னே.

இவ்வளவு எண்ணற்ற நன்மைபுரியும் கன்னியர் மனங்கோணாது நாமும் தேவபயமுடையவராய் நடப்போம். கிறிஸ்துவின் உண்மைச் சோதரர்களாய் வாழ எம்மை ஆயத்தப்படுத்துவோம். முத்தியடையும்வரை நல்வழிநடப்போம். எம் நேசத்திருக்குடும்பக் கன்னியர் என்றும் குன்றின்மேல் விளக்காய் ஒளிர்விட்டுப் பிரகாசிக்க ஈசன் ஒளி அவர்கள்மேல் வீசுவதாக.

— செல்வி பார்பரு யோசேப்

# கன்னியரும் அவர்கள்...

(முன்பக்கத் தொடர்ச்சி)

அக்காலத்தில் யாழ்ப்பாண மேற்றிராசனத்தில் ஊழியஞ்செய்த கன்னியர்கள் சம்பேதுருசபையினராக அறியப்பட்டனர். இவர்கள் திருக்குடும்ப சபையினரால் வழிநடத்தப்பட்டனர். 1882-ம்ஆண்டில் வந்திக்கத்தக்க கிறிஸ்தோப்பர் பொஞ்ஜீன் ஆண்டவரவர்கள் போர்டோநகரத்து முதலாளித்தாயாரின் அனுமதிபெற்றுச் சம்பேதுருசபைக் கன்னியர்களைத் திருக்குடும்பசபையுடன் இணைத்தனர். பின்னர் இச்சபையினர் கிளைச்சபைகளுளொன்றாகிய மாசில்லாதமாதா சபையினருடன் சேர்க்கப்பட்டுப் போர்டோநகர மிஷனரிக் கன்னியர்களால் வழிநடாத்தப்பட்டனர். இதன்படியே இவர்கள் மாசில்லாதமாதா கிளைச்சபை உடையினைத்தரித்துக் கொண்டார்கள். இங்குள்ள சுதேசகன்னியர்சபையும், போர்டோ நகரத்தில் இருக்கும் சபையும் ஒரேபிரமாணங்களைக் கொண்டன.

இச்சபைக்குச் சேர்ந்த கன்னியர் அமைச்சல், தரித்திரம், கற்புஎன்னும் மூன்று வாக்குத்தத்தங்கட்கேற்ப ஒழுகி வருகிறார்கள். இன்னும் தங்கள் ஆஸ்திபாஸ்தி, பெற்றார், உற்றார், உறவினர் யாவற்றையும் துறந்து, ஐம்புலன்களை அடக்கி, சுதேசநாட்டை விட்டுக் கடல்கடந்து அந்நியதேசங்கட்குச்சென்று சகலத்துக்குங்காரணகர்த்தாவாகிய இறைவனுக்கு இன்பமாகத் தொண்டுபுரிகிறார்கள். இவர்களின் சீவியம் "நீ இவ்வுலகத்தின் பொருட்டு உண்டாக்கப்பட்டவளல்ல" என்பதை உணர்த்துகின்றது.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Saturday November 3-1962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org